பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 12, வெள்ளிக்கிழமை 26.05.2017 | கதிர் 201


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# ஞானசார தேரர் தலைமறைவு; கைது செய்யத் தீவிர தேடுதல்

## நாட்டை விட்டு வெளியேறாமல் தடுக்குமாறு நீதிமன்று உத்தரவு



கொழும்பு, மே 26

முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் மீது அண்மைக் காலமாக நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்த ஞானசார தேரரைக் கைது செய்வதற்காக பெரும் தேடுதல் ஒன்றைப் பொலிஸார் ஆரம்பித்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அவர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லாமல் இருக்கும் வகையில் தடை உத்தரவு ஒன்றையும் நீதிமன்றத்திடம் தாங்கள் பெற்றிருக்கின்றார்கள் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

"நீதியைநிலைநாட்டுவதைத் தடுத்தல், வெறுப்பூட்டும் பேச்சு ஆகிய உட்பட பல குற்றச்சாட்டுகள்குறித்து

பக்கம் 18 »

### வித்தியா கொலை வழக்கு

## ட்ரயல் - அட் பார் ஆயம் 12 ஆம் திகதி கூடும்

யாழ்ப்பாணம், மே 26

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள மூன்று நீதிபளைக் கொண்ட மேல் நீதிமன்றத்தின்

பக்கம் 18 »

## ஆஸி. பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு



ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஆஸ்திரேலியப்

பக்கம் 18 »

## வடக்கு மாகாண சபையில் நேற்று அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

### அடுத்த அமர்வில் முதல்வர் விவரம் தருவார்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை தன்னிடம் கிடைத்திருப்பதாகவும் விசாரணை அறிக்கை தொடர்பில் அடுத்த அமர்வில் தெரியப்படுத்தப்படுமென்றும்

பக்கம் 18 »

## தனியார் கல்வி நிலையங்கள் இனிமேல் வெள்ளி, ஞாயிறு இயங்க அனுமதி இல்லை

### காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையே இயங்கலாம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் மாலை ஆறு மணிக்குப் பின்னரும் காலை ஆறுமணிக்குமுன்னரும் செயற்படுவதை நிறுத்த வேண்டுமெனவும் வாரத்தின் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங்க வேண்டுமென்றும் வடக்கு மாகாண சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் 93 ஆவது அமர்வு நேற்று கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில்

பக்கம் 18 »

## சபைச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு விசேட விவாதம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்குமாகாண சபையின் கடந்த மூன்றரை வருட செயற்பாடுகள் குறித்து, விவாதிப்பதற்கு சிறப்பு அமர்வொன்றை நடத்த வேண்டுமென சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் நேற்று விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அடுத்த மாத இறுதியில் விசேட அமர்வொன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 18 »

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறுக்கீடு, குழப்பங்களுக்கு வருத்தம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் ஏற்பட்ட குறுக்கீடுகள், குழப்பங்களுக்கு மாகாண சபை வருத்தம் தெரிவித்துள்ளது.

வடக்குமாகாணசபையின் நேற்றைய 93 ஆவது அமர்வின் போது விசேட அறிக்கையொன்றைக் கொண்டு வந்து கருத்து வெளியிடுகின்ற போதே அவைத்தலைவர்

பக்கம் 18 »

## சபையின் நுழைவாயிலை மறித்தமைக்குக் கண்டனம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்குமாகாண சபையின் நுழைவாயில் கதவுகளை மூடி, சபையின் உறுப்பினர்களை உள்ளே விடாது தடுத்து நிறுத்தி பட்டதாரிகள் நடத்திய போராட்டத்திற்கு மாகாண சபையின் நேற்

பக்கம் 18 »

## விக்கி, சிவாஜியை கைது செய்தால் ஞானசாரர் சரணாம்!

கொழும்பு, மே 26

வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டால் வண.ஞானசார தேரர் உடனடியாகச் சரணடைவாராம்.

– இப்படி நேற்றுத் தாம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில்

பக்கம் 18 »

## கிளிநொச்சியில் குளத்தில் மூழ்கி இளைஞன் மரணம்

கிளிநொச்சி இரணைமடு பிரதேசத்தில் கனகாம்பிகைக்குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில்மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி இரணைமடுவைச் சேர்ந்த 22 வயதான பாலசுப்பிரமணியம் விஜிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பக்கம் 18 »

### வலி.வடக்கில் படை ஆக்கிரமித்திருந்த

## கிணற்றைத் துப்புரவு செய்தபோது வெளிவந்தன மோ.சைக்கிள்கள்

### இலக்கத் தகடுகளை எடுத்துச் சென்றனர் படையினர்

(எஸ்.நிதர்ஷன்)

வலி.வடக்கில் படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றைத் துப்புரவு செய்த போது அதற்குள் இருந்து துருப்பிடித்த நிலையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டன.

பக்கம் 18 »

## வீரவன்ஸ மனைவியின் அ.அட்டையும் கடவுச் சீட்டும் நீதிமன்றத்தில் மாயம்!

### அவருக்கு எதிரான முக்கிய சான்றுப் பொருள்களாம்



கொழும்பு, மே 26

விமல் வீரவன்ஸவின் மனைவியான சசி வீரவன்ஸவின் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை என்பன நீதி மன்றத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றப் பாதுகாப்பில் இருந்து காணாமல் போயிருக்கின்றன அவை

பக்கம் 18 »

## கலப்பு உயர்மின்வலுப் பூங்கா பூநகரியில் அமைக்க முடிவு!

கொழும்பு, மே 26

பூநகரியில் கலப்பு முறையிலான உயர் மின்வலுப்பூங்கா ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை இந்த வாரம் அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது.

காற்றாலை மூலம் 240 மெகாவாட்ஸ் மின்சாரமும்,

பக்கம் 18 »

### 4 வருடங்களுக்கு முன் பொதுமக்கள் மீது சூடு:

## பிரிகேடியர் குணவர்த்தனா கைது!

### இறுதி யுத்தத்தின் பிரிகேட் தளபதி ஆவார்



கொழும்பு மே 26

நான்கு வருடங்களுக்கு முன்னர் ரத்துபுசல்வாவையில் சுத்தமான குடி தண்ணீர் கோரி போராட்டம் நடத்தியோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும்படி உத்தரவிட்டார் எனக் கூறப்படும் பிரிகேடியர் அநுர தேசப்பிரிய

பக்கம் 18 »

### அப்ப அருணாசலம்



ஞானசாரர் சரணாம் கச்சாமி....!

# அத்துமீறல் தொடர்ந்தால் மீனவர் கைது தொடரும்!

## எச்சரிக்கிறார் அமைச்சர் அமரவீர



கொழும்பு, மே 26

இலங்கைக்கடல்எல்லையில் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் அத்துமீறினால், கைது நடவடிக்கை மற்றும் விசைப்படகுகள் பறிமுதல் தொடரும் என்று மீன் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைக் கடல் எல்லையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிச் செயற்பாடுகள் இடம்பெற்று வரும் நிலையில், கடந்த காலத்தில் இந்திய மீனவர் தரப்புடன் இலங்கை அரசியல் தரப்பு உயர் மட்ட பேச்சுகளை மேற்கொண்டது.

அதேபோல அதிகாரிகள் மட்ட பேச்சுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதைத் தொடர்ந்து, இரு நாடுகளின் பிரதிநிதிகளும் எடுத்த முடிவின் அடிப்படையில், சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

குறிப்பாக, இலங்கைக் கடல் எல்லையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி மற்றும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகள், இலங்கையின் வடபகுதி மீனவர்களைப் பெரிதும் பாதித்திருந்த நிலையில், அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் என்னிடம் முறையிட்டிருந்தனர்.

அதைத் தொடர்ந்தே, இந்திய தரப்புடன் பல்வேறு மட்ட பேச்சுகளை முன்னெடுத்திருந்தோம். அந்தவகையில், எங்களது கோரிக்கைகளை இந்தியத் தரப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, சட்டவிரோதம் எனக் கருதி இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி முறைமையில், எந்தக் காரணத்தைக் கொண்டும் இலங்கைக் கடல் எல்லையில் மீன்பிடி களை மேற்கொள்ளக் கூடாது என்பதையும் அத்துமீறல்களைத் தடுக்கவேண்டும் என்றும் நாங்கள் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளோம்.

அதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிச் சம்பவங்கள், ஐம்பது சதவீதமாகக் குறைந்துள்ளன.

இது, எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் எங்களது மீனவர்களின் நலன்களைக் கருத்தில்கொண்டே செயற்பட்டு வருகிறோம்.

மேலும், இலங்கையின் வசம் உள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகளை ஏற்று 42 படகுகளை விரைவில் விடுவிக்க அரசு தீர்மானித்துள்ளது. இந்தியத் தூதரகத்துக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளோம்.

எனினும், எங்களது நிபந்தனைகளுக்கு உட்பட்டே படகுகள் விடுவிக்கப்படும். நிபந்தனைகளை மறுக்கும் பட்சத்தில், படகுகளை விடுவிக்கமாட்டோம்.

அதேபோல படகுகளை நாங்கள் மீண்டும் வழங்குகின்றோம் என்பதற்காக, இந்திய மீனவர்களின் படகுகளைக் கைப்பற்ற மாட்டோம் என்று அர்த்தமில்லை.

இப்போது, படகுகளைக் கொடுத்தாலும் எங்கள் எல்லைக்குள் அத்துமீறும் படகுகளை நாம் தொடர்ச்சியாகக் கைப்பற்றுவோம். இதில் எந்த மாற்றமும் இல்லை. - என்றார்.

## சீரற்ற காலநிலையால் மணசரிவு அபாயம்!

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சில பகுதிகளில் மண் சரிவு அபாயம் காணப்படுவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது பெய்து வரும் அடை மழையால் களுகங்கையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் எலபாத, பெல்மடுல்ல, குருவிட்ட, எஹலிய கொட, கிரிஎல்ல, மற்றும் இம்புல்பே பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கேகாலை மாவட்டத்தின் புலத்கொஹு பிட்டிய மற்றும் தெஹியோவிட்ட பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் மக்கள். மண்சரிவு தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(எ)

## நிதி மோசடிக் குற்றச்சாட்டில் அளுத்கமகேவுக்குப் பிணை!

கொழும்பு, மே 26

பொரளை - கிங்ஸி வீதியிலுள்ள வீடொன்றை 2 கோடி 70 லட்சம் ரூபா செலுத்தி கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வருமானத்துக்குஅதிகமாக சொத்து குவித்தமை தொடர்பில், நிதி மோசடிச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தொடர்பில் குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. அதை அடுத்தே அவர் இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதன்பிரகாரம், 2 லட்சம் ரூபா பணம் மற்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

இதனையடுத்து, அந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு எடுத்துக் கொள்வதாக நீதிமன்றம் அறிவித்தது.

(எ)

## தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்த சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம்

### உலக சுகாதார மாநாட்டில் ராஜித வலியுறுத்து

தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்று உலக சுகாதார மாநாட்டில் சுகாதார போசாக்கு மற்றும் சுதேசவைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் 70 ஆவது மாநாடு ஜெனீவா நகரில் நடைபெற்றுவருகிறது. இதில் கலந்துகொண்டு தொடர்ந்தும் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிலைபேறான அபிவிருத்திக்காக மக்கள் ஐக்கியப் படவேண்டும். இலங்கை அரசு சுகாதார சேவையை மேம்படுத்த மொத்தத் தேசிய உற்பத்தியில் மூன்று சதவீதத்துக்கும் மேலான தொகையை ஒதுக்கீடு செய்கிறது.

முப்பது வருடகால போரைத் தொடர்ந்து இலங்கையின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவது சவாலாக மாறியுள்ளது. இந்தத் துறையில் மோசடிகளும், வீண் விரயமும் குறைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் மலேரியாவைக் கட்டுப்படுத்தியமை தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் சான்றிதழ் வழங்கியுள்ளது. எச்1என்1 வைரஸைக் கட்டுப்படுத்தும் சீரான திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.- என்றார்.

(எ)

## உடனடியாகத் தீர்வு காணப்படக்கூடிய பிரச்சினைகளைக் கூட அரசு தீர்க்கவில்லை

### சாடுகிறார் சாந்தி எம்.பி.

யாழ்ப்பாணம், மே 26

உடனடியாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைக் கூட இந்த அரசு தீர்க்காத நிலை தான் காணப்படுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா கடுமையாகச் சாடியுள்ளார்.

வன்னியின் தற்போதைய நிலை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் முடிவடைந்து 9 வருடத்தை நோக்கிச் செல்கின்ற நிலையிலும் வன்னியில் மக்களினுடைய அடிப்படைப் பிரச்சினைகள் கூட இன்னும் தீர்க்கப்படவில்லை. தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைக் கூட அரசு தீர்க்காத ஒரு நிலை தான் காணப்படுகின்றது. அந்த வகையில் பூர்வீகமாக மக்கள் வாழ்ந்த நிலங்கள் விடுவிக்கப்படாமை அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப் படாமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக உள்ளது. இதில் மக்கள் பூர்வீகமாக அந்த நிலங்களில் வாழ்ந்தார்கள் என்பதற்கான பல ஆதாரங்கள், ஆவணங்கள் இருக்கின்றன. கொக்கிளாய், வட்டுவாகல், கேப்பாபிலவு, செம்மலை, அலம்பில், புதுக்குடியிருப்பு என முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமன்றி மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் பல காணிகள் விடுவிக்கப்படவில்லை.

மக்களிடம் காணிக்கான ஆவணங்கள் இருந்தும் அவை விடுவிக்கப்படாது இராணுவம், கடற்படை, விமானப்படை என்பன ஆக்கிரமித்து வைத்துள்ளன. இந்தக் காணிகள் விடுவிக்கப்படும் என கடந்த 8 வருடங்களாக மக்கள் காத்திருந்தார்கள். ஆனால் அவ்வாறு நடைபெறாமையால் தற்போது அந்தக் காணிகளை விடுவிப்பதற்காக மக்கள் சாத்வீக ரீதியாக வலிந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளுக்கு முன்பக்கமாக கொட்டகைகள் அமைத்து இரண்டு மாதங்களுக்கு மேலாக காணிகளை விடுவிக்குமாறு போராடி வருகிறார்கள். இதே போன்று கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். ஆனால் அரசு மக்களினுடைய நிலத்தில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைத்து அதனை விடுவிக்க முடியாது என தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றது. - என்றார்.

(எ-100)

## குடிதண்ணீர் தாங்கி திறந்து வைப்பு



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்வளை கிராமத்துக்கு பிரதேச சபையால் குடி தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி.தென் மேற்கு பிரதேச சபை செயலாளர் எஸ்.சற்குணராஜா ஆகியோர் நேற்று முன்தினம் புதிய நீர்த் தாங்கியை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தனர்.

(எ)

# ‘ஊடக சுதந்திரத்தை ஏற்படுத்தினேன்’ முன்னாள் ஊடக அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, மே 26

ஊடகவியலாளர்களுக்கு உரிய சுதந்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்த பின்னரே தாம் மற்றொரு அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றார் என, முன்னாள் ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலகதெரிவித்துள்ளார்.

மேலும், நல்லாட்சியில் எந்தவொரு ஊடகவியலாளரும்தாக்கப்படவோ அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படவோ அல்லது உயிர் அச்சுறுத்தலால் நாட்டைவிட்டு தப்பிச் செல்லவோ இல்லை எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

ஊடகங்கள் தகவல்களை சரியாகஅறிந்துஎழுதுவதுசிறந்தது என்பதற்காக தகவல் அறியும் உரிமை சட்டமூலத்தை கொண்டு வந்த நபர் என்ற ரீதியில் ஊடகங்களுக்கு நான் கருத்துத் தெரிவிக்கிறேன்.

யாருக்கும் எதையும் எழுதுவதற்கு, பேசுவதற்கு சுதந்திரம் இருக்கிறது. அவ்வாறானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டே வேறோர் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுள்ளேன்.



நான் எந்தவொரு பதவியையும் கேட்டு வாங்கவில்லை. ஊடக அமைச்சுப் பதவியைக் கூட நான் கேட்டுப்பெறவில்லை. ஊடக சுதந்திரங்கள் மீது நான் எப்பொழுதும் கைவைக்கவில்லை. எந்தவொருவிமர்சனங்களையும் எழுதுவதற்கு இடமளித் துள்ளேன். – என்றார். (ம)



காங்கேசன்துறையில் உள்ள கிணற்றில் இருந்து நேற்று மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள். (செய்தி முதலாம் பக்கத்தில்)

## சட்டவிரோத விதைப்பைக் கட்டுப்படுத்த கோரிக்கை

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கையில் அதிகாரிகளின் துண்ணயுடன் சட்டவிரோதமேலதிக விதைப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவிவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத் தப்பட்ட போதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லைஎனபாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள்கவலைவெளியிட்டுள்ளனர். (ம)

## இ.போ.ச. பேருந்து மீது கல் வீசித் தாக்குதல்

முல்லைத்தீவு - முள்ளியவளை யில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீது நேற்றிரவு 8.30 மணியளவில் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதனால் பேருந்து சிறு சேதமடைந்தது எனவும் கூறப்படுகின்றது.

மேற்படிப் பேருந்து முள்ளிய வளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## முறிகண்டியில் ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

### நேற்றிரவு சம்பவம்

மாங்குளம், மே 26

முறிகண்டிப் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றரயில்விபத்தில்குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தபால் ரயிலுடன் மோதுண்டதாலேயே அவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி பொன்னகரை சேர்ந்த தவமன்றன் பாலசூரியர் (வயது-43) என்பவரே உயிரிழந்தவராவார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

அவரது சடலம் அந்த ரயிலில் ஏற்றிச் செல்லப்பட்டு மாங்குளம் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. (ம-81)

## ஐ.தே.க. பசறைத் தொகுதியின் அமைப்பாளராக வடிவேல் சுரேஷ்

ஐக்கிய தேசியக் கட்சியின் பசறைத் தொகுதி அமைப்பாள ராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்டது.

அதேபோல், ஏனைய தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்ட அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களையும் பிரதமர் நேற்று வழங்கினார். (ம)

## யுத்தம் முடிவடைந்த போதிலும் மக்களின் காணிகளில் படையினர்

### நாடாளுமன்றில் சாந்தி எம்.பி. எடுத்துரைப்பு

கொழும்பு, மே 26

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்துள்ள போதும் மக்கள் தங்களுடைய காணிகளை விடுவிப்பதற்காக பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் போராடி வருகின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 30 வருட யுத்தத்தின் போது மக்கள் பல துன்பங்களை சந்தித்ததுடன், தமது பூர்வீக காணிகளையும் இழந்தனர். அவற்றை மீட்பதற்காக பல்வேறு இடங்களிலும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருப்பினும் அவர்களுடைய காணிகளைவிட்டு படையினர் வெளியேறவில்லை. எனவே இது தொடர்பில் உடனடிக் கவனமெடுத்து மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். – என்றார். (ம)

## மாகாண சபைகளில் ஐ.தே.கவுடன் கூட்டாட்சி அமைக்க முடியாது

### அடித்துக் கூறுகிறது ஐ.ம.சு.மு.

கொழும்பு, மே 26

மாகாண சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டாட்சி அமைக்கும் எந்தவொரு நோக்கமும் தங்களுக்கு இல்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல்களில் நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பிலேயே வேட்புமனுத் தாக்கல் செய்வோம். எங்களது கட்சியை வெற்றி பெறச் செய்வதே எமது நோக்கமாகும் எனவும் அவர் கூறினார்.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தம் வசமுள்ள மாகாண சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கப்போகின்றது என ஒரு தகவல் பரவி வருவதாகவும் அவ்வாறான ஒருதிட்டமோ அது தொடர்பான பேச்சுவார்த்தைகளோ இதுவரை நடைபெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளில் நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளோம். எனவே, அங்கேகூட்டாட்சிஎன்றபேச்சுக்கே இடமில்லை என்றும் மஹிந்த அமரவீர கூறினார். (ம)

## மந்துவிலில் வாள்வெட்டுச் சம்பவம்: சந்தேக நபர்கள் இனம்காணப்பட்டனர்

சாவகச்சேரி, மே 26

சாவகச்சேரி - மந்துவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேக நபர்கள் நேற்று அடையாள அணிவகுப்பில் இனம்காணப்பட்டனர்.

மேற்படி பிரதேசத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முச்சக்கர வண்டியுடன் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் கடந்த 19 ஆம் திகதி அங்கு இடம்பெற்ற மோதல் ஒன்றின்போது பிரதான சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

மேற்படி ஆறு பேரும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் நால்வர் இனங்காணப்பட்டனர். குறித்த நால்வர் உட்பட அறுவரையும் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார். (ம)

## மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டடம் திறப்பு



சாவகச்சேரி, மே 26

மட்டுவில்கமலாசனிவித்தியாலயத்தில்விசேடதேவைகொண்ட மாணவர்களின் கல்வியை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன்கட்டப்பட்டபுதியகட்டடம்நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் கௌரிபொன்னையா1.5 மில்லியன் ரூபா செலவில் மேற்படி புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதியைக் கட்டிக் கொடுத்துள்ளார்.

மேற்படிக் கட்டடத் திறப்பு விழா நேற்று மதியம் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் ஜ.தேவராஜன் தலைமையில் இடம்பெற்றபோது, கட்டடத்தைக் கட்டிக் கொடுத்த கௌரி பொன்னையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அதைத் திறந்து வைத்தார்.

இந்தநிகழ்வில்தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர்கலந்துகொண்டனர். (ம-21)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

### அரசும் அவசரகாலச் சட்டமும்

"நாட்டின் சகல மக்களினதும் அதிருப்தியைச் சம்பாதித்துள்ளது நல்லாட்சி அரசு. அந்தச் சூழலில் தேர்தல்களை எதிர்கொள்ள அரசு அஞ்சுகின்றது. அதனால், செப்ரெம்பரில் காலவதியாகும் மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை நடத்தாமல் ஒத்திப் போடுவதற்கு அவசரகாலச் சட்டத்தை அது நாடப் போகின்றது. அரசுக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் பெருகி வரும் நிலையில் அவற்றை அடக்கவும், தேர்தல்களைத் தள்ளி வைக்கவும் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் கொண்டு வருவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை."

- இவ்வாறு அபாயச் சங்கு ஊதியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதியும் கூட்டு எதிரணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கையில் அவசரகாலச் சட்டத்தின் தாற்பரியத்தை அதிகம் புரிந்தவர்கள் - அதன் மூலம் அதிக அதிகாரத்தை ருசித்தவர்கள்- அவரும் அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவும் அன்றி வேறு யாருமல்லர் என்பது அப்பட்டமான உண்மை.

தமது முதலாவது பதவிக் காலம் முழுவதையுமே யுத்தத்தின் பெயரால் இந்த அதிகாரத்தை ருசித்தபடி செலவிட்டவர் மஹிந்த ராஜபக்ஷதான்.

அவசரகாலச் சட்டம் தமக்கு வழங்கிய அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவர் ஆடிய ஆட்டங்களின் ஆரம்பந்தான் - அல்லது விளைவுகள்தான் - அவர் முற்கூட்டியே நடத்திய ஜனாதிபதித் தேர்தலில், அவராகவே விழுந்து கவிழ்ந்துகொட்ட வழி செய்தன என்பதும் கடந்த கால சரித்திரம்.

யுத்தம் முடிவுற்று இரண்டு வருடங்கள் கழிந்து - 2011 இல்தான் - தமது ஆட்சியில் முதல் ஆறு ஆண்டுகள் நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டம் கலாவதியாகிச் செல்ல அவர் அனுமதித்தார்.

அப்படி அனுமதித்த பின்னரும் கூட அவர் சும்மா இருக்கவில்லை. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்படும் அவசரகாலச் சட்டத்தின் பல விதிமுறைகளை அப்படியே எடுத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குள் செருக ஏற்பாடு செய்தார். அதன் மூலம் அவசரகாலச் சட்டம் காலாவதியானலும் அதன்கீழ் வழங்கப்பட்ட பல அதிகாரங்களை அச் சட்டம் செயலிழந்த சமயங்களில் கூட, பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் தாமும் தமது அதிகாரக் கட்டமைப்பும் பிரயோகித்துக் கொள்வதற்கான வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - உறுதிப்படுத்திக் கொண்டார்.

ஆகவே, அத்தகைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி என்னவெல்லாம் செய்யலாம் என்பது மஹிந்தருக்குத்தான் அனுபவ ரீதியாக அத்துப்படி. எனவே அவரது எச்சரிக்கை கவனத்தில் கொள்ளத்தக்கதே.

அவசரகாலச் சட்டம் என்பது வெறுமனே யுத்தத்துகாகவும், அரசியல் எதிரிகளை அடக்குவதற்காகவும் பிரயோகிக்கப்படும் ஒன்றல்ல.

தேசிய நெருக்கடிகள் வரும் சமயத்தில் அவற்றை எதிர்கொள்வதற்காகவும் இது கொண்டு வரப்படலாம்.

2004 டிசெம்பர் 26 ஆம் திகதி ஆழிப்பேரலை அனர்த்தம் இலங்கையைப் புரட்டிப் போட்டபோது அதனால் ஏற்பட்ட நெருக்கடிகளைச் சமாளிக்கவும், இராணுவம் உட்பட முப்படையினரையும் அவசர முதலுதவி, உடனடி மீட்புப் பணிகளுக்கு இறக்கச் செய்யவும் 'அவசரகாலச் சட்டம்' பிரகடனப்படுத்தப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதனைப் பிறப்பித்தார். அது சுமார் மூன்று ஆண்டுகள் சந்திரிகா அம்மையாரால் நீடிக்கப்பட்டது.

அதுபோலவே, அண்மையில் வறட்சி முழு நாட்டையும் பாதிக்கும் மோசமான நிலைமை ஏற்பட்டபோது முப்படையினரையும் களத்தில் இறக்கி நிவாரணப் பணியை முன்னெடுப்பதற்கு வசதியாக - வாய்ப்பாக - அவசரகால சட்டத்தை பிரயோகிக்கலாமா என்று 'நல்லாட்சி' அரசு பரிசீலித்தது. எனினும் அந்த யோசனை பின்னர் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அவசர காலச் சட்டம் என்பது தீக்குச்சி போன்றது. தீக்குச்சி கொண்டு விளக்கும் ஏற்றலாம்; வீட்டையும் எரிக்கலாம்.

அதனை நாம் எவ்வாறு பிரயோகிக்கின்றோம் என்பதில்தான் விடயங்கள் அடங்கியுள்ளன.

ஆனாலும், இந்த அவசரகாலச் சட்ட அதிகாரத்தைத் தமது கைவசம் இருந்து விட்டுக் கொடுப்பதில்லை என்பதில் நல்லாட்சி அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மிக உறுதியதாகத்தான இருக்கிறார் என்பதும் கவனிக்க வேண்டியதே.

ஜனாதிபதி ஒருவர் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தால், 14 நாள்களுக்கு மேல் அதை நீடிப்பதற்கு நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மை மூலம் அனுமதி பெறப்படவேண்டும் என்றும், அதன்பின் ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்ற அனுமதியுடனேயே அது மேலும் நீடிக்கப்பட்ட முடியும் என்றே தற்போதைய அரசமைப்புக் கூறுகிறது.

இங்கு 'சாதாரண பெரும்பான்மை' என்பதை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையாக மாற்றுவதற்கு மனித உரிமைகள் ஆர்வலர்கள் சிலரால் எடுத்த முயற்சி ஜனாதிபதி மைத்திரிபாலவினால் முறியடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆக, அவரும் அந்த அதிகாரத்தை வசதியாகத் தமது கையில் வைத்திருக்க வேண்டும் எனக் கருதுவதில் ஏனைய ஜனாதிபதிகளுக்கு வேறானவர் அல்லர் என்பதும் சரியானதே.

# முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் தடுக்கத் தவறியது பொலிஸ் துறை!

## குற்றம் சாட்டுகின்றன மனித உரிமை அமைப்புகள்

முஸ்லிம்களின் வணிக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடுக்க இலங்கை பொலிஸ் தவறிவிட்டதாக, மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான வ்ணிக நிலையங்கள், பள்ளிவாசல்கள், மையவாடி என்பனவற்றின் மீது கடந்த ஒரு மாத காலத்துக்குள் இடம்பெற்றுள்ள 20 வரையான தாக்குதல்கள் தொடர்பாக இது வரையில் இலங்கை பொலிஸரால் எவரும் கைது செய்யப்படவில்லை.

இதுதொடர்பாக மனித உரிமை செயற்பாட்டாளரான விக்டர் ஐவன் கொழும்பில் நேற்றுமுன்தினம் தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸாரின் செய லற்ற தன்மையால் தான், 2014 ஆம் ஆண்டு 4 பேரைப் பலிகொண்டது போன்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் மீள நிகழ்த்தப்பட்டுள்ளன.

குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காததன் மூலம், இந்த நடவடிக்கைகள் தொடர்வதற்கு இலங்கை பொலிஸ்துறை பொறுப்பாளியாகியுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்த வன்முறைகளுக்கு பௌத்த அடிப்படைவாத அமைப்பு ஒன்றே காரணம்.- என்றார். (எ)

# முஸ்லிம் எம்.பிக்கள் உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும்

## முன்னாள் அமைச்சர் அஸ்வர் வலியுறுத்து



கொழும்பு, மே 26

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக நடந்தேறும் அசாதாரண நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது. எனவே நல்லாட்சி அரசை ஆட்சிக்கு கொண்டு வருவதில் மிகுந்த பங்காற்றிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும் என்று முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம்.அஸ்வர் வலியுறுத்தியுள்ளார்.

பொரளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டு எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தற்போது எப்போதும் இல்லாதவாறு இனவாதம் கரைபுரண்டோடுகிறது. முஸ்லிம்கள் மீது மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அசம்பாவிதங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் முறையிடப்பட்டுள்ளது. எனினும் எவ்வித நடவடிக்கையும் இல்லை என அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவிக்கின்றனர். அவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் முன்னாள் அரசில் முஸ்லிம்களுக்கு எதிரான கெடுபிடிகள் இடம்பெறுகின்றன என்று குற்றம்சாட்டி நல்லாட்சி அரசை ஆட்சிக்கு கொண்டு வந்தனர்.

எனவே தற்போது முஸ்லிம்களுக்கு எதிராக இடம் பெறும் இனவாதச் செயற்பாடுகளுக்கு முஸ்லிம் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களுமே பொறுப்புக்கூற வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு அரசால் நடவடிக்கை எடுக்க முடியாது போனால் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்கள் 21 பேரும் உடனடியாக அரசை விட்டு வெளியேறி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து மாற்று நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

அல்லாதுபோனால் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மிக இக்கட்டான நிலையை அடையும். அது பெரியளவில் விளைவுகளை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. மேலும், சில தினங்களில் புனித ரம்ழான் நோன்பு ஆரம்பமாகவுள்ளது. முஸ்லிம்கள் சுதந்திரமாக அந்த மாதத்தில் தமது மார்க்கக் கடமைகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.- என்றார்.

# மிகவும் மந்தகதியில் நகர்கின்றன இலங்கையின் சமாதான முனைப்புகள்

## குற்றஞ்சாட்டுகிறது ஐரோப்பிய ஒன்றியம்



கொழும்பு, மே 26

இலங்கையின் சமாதான முனைப்புக்கள் மிகவும் மந்தகதியில் நகர்கின்றன என்று ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தங் லாய் மர்கு இது தொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

காணாமல் போனோர் அலுவலகம் போன்ற நேரடியாக மேற்கொள்ளக்கூடிய விடயங்களைக் கூட அரசு முனைப்புடன் மேற்கொள்ளத் தவறியுள்ளது.

நல்லிணக்க முனைப்புக்களை மேம்படுத்துவதற்கு அரசு மேலும் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.-என்றார். (எ)

நீர் வெறுப்பு நோயைத் தவிர்ப்போம்!
நாய்க் குட்டிகளுக்கு அருகில் செல்லாதீர்கள். தன் குட்டிகளைக் காப்பாற்றும் நோக்கில் நாய் கடிக்க முற்படலாம்.
எம் குழந்தைகளின் பாதுகாப்பில், அவதானமாக இருப்போம்

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ். மாநகர சபை.

### நாளை

27.05.2017
சனிக்கிழமை

நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ. 9.46 வரை
திதி : துதியை மு.இ. 9.19 வரை
சுபநேரம் : 2.52 - 4.22 வரை
இராகுகாலம் : 8.52 - 10.22 வரை

## வடமாகாண ஊடகவியலாளர் கருத்தரங்கு

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் வடமாகாண ஊடகவியலாளர்களுக்கான தகவல் அறியும் சட்டம் மற்றும் ஊடக சுதந்திரம் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் கிளிநொச்சியில் அமைந்துள்ள பிறன்ஸ் இன் விருந்தினர் விடுதியில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும். இந்தக் கருத்தரங்கில் வடமாகாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (ச)

# குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விற்பனைக்கு விரைவில் தடை

## அதற்கான சட்டம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை என்கிறார் பிரதமர்



கொழும்பு, மே 26
குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு தடை விதிக்கும் வகையிலான சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடவத்தைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதிய வணிகத் தொழிற்சாலை ஒன்றை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு இயந்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வரி விலக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்றுமதியின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கே நாம் முயற்சித்து வருகின்றோம். தேசிய உற்பத்திகளுக்கு மாறாக சர்வதேச முதலீட்டாளர்களுக்கு உற்பத்திகளில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இலங்கைக்கு கிடைத்துள்ளது மட்டுமன்றி, சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் முதலீடுகளை மேற் கொள்ள முன் வந்துள்ள நிலையில், நாட்டில் புதிய யுகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. - என்றார். (எ)

## அழிக்கப்படும் தொல்பொருள்கள் ஆராய்வதற்கு தெரிவுக்குழு தேவை!

### அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோள்



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல் பொருள் இடங்கள் மற்றும் அவை அழிக்கப்படுகின்றமை தொடர்பில் முரண்பாடான புள்ளி விவரங்கள் வெளியிடப்படுகின்றன. எனவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தெரிவுக்குழுவை அமைக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளையின் கீழ், நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் நேற்று முன்தினம் எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பின்னர் கருத்துரைக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கோரினார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்று சபா நாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

## அரசியல் கைதிகளின் வழக்குகள் விரைவில் கொழும்புக்கு மாற்றப்படும்

### அது குறித்து பரிசீலிக்கப்படுவதாகக் கூறுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, மே 26
தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை கொழும்புக்கு மாற்றுவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதுதொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை திருத்தச் சட்ட மூலத்தின் மீதான விவாதத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அனுராதபுரம் விசேட நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் காலதாமதமாகின்றன. அதனால் அனுராதபுரம் விசேட நீதிமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளின் வழக்குகளையும் கொழும்புக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வீர்களா என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர், 'இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. அதன்படி இது தொடர்பில் விரைவில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்' என்று குறிப்பிட்டார். (எ)

# இனங்களுக்கு இடையில் பகையுணர்வை ஏற்படுத்துவதற்கு சில சக்திகள் முயற்சி!

## அரசை எச்சரிக்கின்றார் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, மே 26
அண்மைக் காலமாக நாடளாவிய ரீதியில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தூண்டுகின்ற பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது எமது மக்களிடையே பதற்றமானதொரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. இந்தச் சம்பவங்கள் தேசிய நல்லிணக்கத்தை நோக்கியதான இந்த அரசின் பயணத்தைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளாகவே உள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை எந்தத் தரப்பினர் மேற்கொண்டாலும், அச் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, இனங்களுக்கிடையில் சுமுகமானதொரு உறவை கட்டியெழுப்பி நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேண வேண்டிய கடப்பாடு இந்த அரசுக்கு உண்டு.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, தென் மாகாண அபிவிருத்தி மற்றும் சட்டம், ஒழுங்கு விவகார அமைச்சர் சாகல ரத்னாயக்கா முன்னிலையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

அம்பாறை மாவட்டத்தில், மாணிக்கமடு, மாயக்கல்லி மலை சிலை வைப்பு விவகாரம் மற்றும் சுமார் 40 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் வணக்க ஸ்தலங்கள் தாக்குதல்களுக்கு உட்பட்டுள்ளன. கடந்த 15 ஆம் திகதி அதிகாலை பாணந்துறை பகுதியில் ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியது. வெல்லம்பிட்டிய கொகிலவத்தை பகுதியில் மேலுமொரு முஸ்லிம் பள்ளிவாசல் கற்களால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது. அதே தினம் திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர், செல்வநகர், நீனாக்கேணி பகுதியில் காணி அபகரிப்பு சம்பவம் ஒன்றால் பிணக்கு ஏற்பட்டது. இதனால் 16 ஆம் திகதி இரவு அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காரணமாக முஸ்லிம் மக்களின் 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் அந்தப்பகுதி வாழ் மக்கள் அங்கிருந்து இடம்பெயரும் நிலை ஏற்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலை குருநாகல் மல்லவப்பிட்டி பகுதியில் முஸ்லிம் பள்ளி வாசல்மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அதே தினம் அதிகாலை பெந்தோட்டை எல்பிட்டிய பகுதியில் முஸ்லிம் நபருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. பொலன்னறுவை சின்னவில் பட்டி முஸ்லிம் கிராமத்தில் இருந்து மக்களை வெளியேறுமாறி கூறி அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 22 ஆம் திகதி அதிகாலை மஹரகம மற்றும் அம்பாறை பகுதிகளில் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான இரு வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கடந்த இரு வாரங்களில் நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான 19 இனவாதச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய செயற்பாடுகள் தொடர்கின்றன.

அதேநேரம், கடந்த 18 ஆம் திகதி தென்பகுதியிலிருந்து வந்திருந்த ஒரு குழுவால் இலங்கை தேசியக் கொடியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற நிறங்கள் அகற்றப்பட்ட தேசியக் கொடிகள் கிளிநொச்சி நகரப் பகுதியில் ஏற்றப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது. கடந்த 19 ஆம் திகதி அதிகாலை கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை கச்சார்வெளிப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இத்தகைய செயற்பாடுகள் இனங்களிடையே தற்போது கட்டியெழுப்பப்பட்டு வருகின்ற இன ஐக்கியத்துக்கும், தேசிய நல்லிணக்கத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற மேற்படி செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸார் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்? மேற்படி நடவடிக்கைகளின் தற்போதைய நிலவரம் யாது என்பதையும் அறியத்தர முடியுமா? இத்தகைய செயற்பாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்கக் கூடிய வகையில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? கிளிநொச்சி பளை பகுதியில் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படுகின்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் உண்மை நிலைவரம் என்ன என்பதை அறியத்தர முடியுமா? எனது கேள்விகளுக்கான பதில்களையும், மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலான விளக்கங்களையும் கௌரவ அமைச்சர் சாகல ரத்னாயக்க வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன். என்றார்.



காலைக்கதிர்



# கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களை முன்னேற்றும் செயற்பாடுகளுக்கு சுவீடன் ஆதரவு!



## இலங்கைக்கான சுவீடன் நாட்டின் ஆணையாளர் அன்னா உக்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 26

இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால யுத்தம் காரணமாகப் பாதிப்புக்கு உள்ளாகிய பெண்களை, முன்னேற்றும் செயற்பாடுகளுக்கு சுவீடன் அரசு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்.

- இவ்வாறு சுவீடன் நாட்டின் இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கான அரசியல் விவகாரங்களுக்கான ஆணையாளர் அன்னா உக்லா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் மற்றும் அவர்களது வியாபார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாபெரும் கண்காட்சியும், விற்பனையும் சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனமான 'வீ எபெக்ட்'நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டப வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தநிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெண்களை ஊக்குவிக்கும் சந்தைக் கண்காட்சி மற்றும் விற்பனை என்பன இங்கு ஒன்பதாவது வருடமாக நடைபெறுகின்றமை எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்தின் ஊடாக இலங்கையின் அபிவிருத்திக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் திட்டங்கள் வெற்றியளித்துள்ளன என்பதையே இந்தக் கண்காட்சி வெளிப்படுத்துகின்றது.

பாதிப்புக்குள்ளான பெண்களை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அத்தனை செயற்பாடுகளிலும் நாம் கைகோர்த்து ஆதரவுக்கரம் நீட்டியிருக்கின்றோம். அதன் அடிப்படையில் இந்த மாதிரியான வாழ்வாதாரத் தொழில் முயற்சி ஊக்குவிப்பு மற்றும் சந்தை வாய்ப்புத் திட்டங்கள் சமூகத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண்களையும், அவர்களின் குடும்பங்களையும் பொருளாதார ரீதியில் வலுப்படுத்த பெருந்துணை புரியும் என்பது எமது நம்பிக்கை.

வறுமை ஒழிப்பிலும், அபிவிருத்தியிலும் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாதவை. அந்த வகையில், இந்த வகையான திட்டங்கள் மிகுந்த பயன் அளிக்கும் என்பது எமது அரசின் நம்பிக்கை ஆகும். யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான இலங்கைப் பெண்களை முன்னேற்றுவதற்கு தொடர்ந்து ஆதரவளிப்போம். - என்- என்றார். (ச)

## தண்ணீர் வாளிக்குள் விழுந்து ஏறாவூரில் குழந்தை சாவு!

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுக்கு உட்பட்ட மீராகேணி ஸக்காத் கிராமத்தில் நேற்று வியாழக்கிழமை பகல் தண்ணீர் வாளிக்குள் விழுந்து மூன்று வயதுடைய பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

மீராகேணி ஸக்காத் கிராமத்தைச் சேர்ந்த பாத்திமா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

மேற்படி குழந்தையின் தாயார் நாளை சனிக்கிழமை வரவிருக்கும் நோன்பை முன்னிட்டு வீடு கழுவி துப்புரவு செய்வதற்காக பிளாஸ்ரிக் வாளியொன்றில் நீர் நிரப்பி வைத்துள்ளார். இந்நிலையில், குழந்தை நீர்நிரப்பியிருந்த வாளிக்கு அருகாமையில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, தவறித் தலைகீழாக வாளிக்குள் விழுந்து மூர்ச்சையாகியுள்ளது.

நீண்ட நேரத்தின் பின்னர், குழந்தையின் மாமனார் சிறுநீர் கழிக்க கழிப்பறைக்கு செல்லும்போதே குழந்தை வாளிக்குள் தலைகீழாகக் கிடப்பதைக் கண்ணுற்றுள்ளார். இதனை அடுத்து, தண்ணீருக்குள் அமிழ்ந்து கிடந்த பிரஸ்தாப குழந்தையை மீட்டெடுத்து ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். எனினும் வரும் வழியிலேயே குழந்தை உயிரிழந்து விட்டது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## முகநூலில் அவமானப்படுத்துகின்றமை பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகும்!



### மனித உரிமைகள் ஆணைக் குழு மட்டு. இணைப்பாளர் தெரிவிப்பு

முகநூலில் பெண்களை அவமானப்படுத்துகின்றமை பெண்களுககு எதிரான வன்முறை ஆகும் என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மட்டக்களப்பு பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

போரதீவுப்பற்றுப் பிரதேச அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் நடராஜா மோகனதாஸ் தலைமையில் கிராம மட்ட சங்கத் தலைவிகளுக்கான செயலமர்வு, வெல்லாவெளி கோட்டக் கல்வி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் வளவாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் முகநூலோடு தொடர்புடைய பெண்களுக்கு எதிரான பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் குடும்ப வன்முறையானது சிக்கலான பிரச்சினையாக எமது பிரதேசத்தில் இருந்து வருகின்றமையை எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. தனி நபர் உறவு நிலை மற்றும் சமூக, கலாசார மட்டங்களில் இதற்குப் பங்களிப்புச் செய்கின்ற பல்வேறு காரணிகள் இந்த வன்முறைகளுக்கு காரணமாக உள்ளன. இதில் முகநூலில் பெண்களை அவமானப்படுத்துவதும் குடும்ப வன்முறைக்கே வழிசமைக்கின்றது.

வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு சிவில் சட்டத்தின்படி பொலிஸ் நிலையத்தை நாட வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும். பொலிஸ் நிலையத்தில் தமக்கு நேர்ந்த வன்முறைகள் பற்றி விவரித்துக் கூறுவதற்குப் பெண்கள் பெரிதும் அச்சம் அடைகின்றனர்.

அவ்வாறான சூழ்நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொறுமையை இழந்து கடும் போக்கைக் கையாள முயலுகின்றனர். எனவே, இவ்வாறான சூழ்நிலையின்போது, பெண்களை மரியாதையுடன் நடத்தவும் அவர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு துரித நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டம் இருக்கின்றது. பெண்கள் எந்தவித பாராபட்சமுமின்றி நடத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடிப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.- என்றார். (ச)

## யுத்தத்துக்குப் பின்னர்தான் இனமுறுகல் அதிகரித்துள்ளது!

### இனத்துவக் கற்கைகளுக்கான நிகழ்ச்சித் திட்ட அதிகாரி தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 26

எமது நாட்டில் யுத்தத்துக்குப் பின்னர்தான், இன முறுகல் அதிகரித்துக் காணப்படுகின்றது என சர்வதேச இனத்துவக் கற்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி எம்.என்.எம்.பஸ்லான் தெரிவித்தார்.

'இலங்கையில் மதம் சமூகங்களுக்கு இடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புதல்' எனும் தொனிப்பொருளில் ஆட்டாளைச் சேனைப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமூகங்களுக்கு இடையில் அதிகரித்துக் காணப்படும் இன முரண்பாடுகளால், மக்கள் நாளாந்தம் அச்சத்துடன் வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை இல்லாமல் செய்வதற்கு வெறுமனே பேச்சளவில் மாத்திரம் நின்றுவிடாமல், இது தொடர்பாக ஆய்வை மேற்கொண்டு, சமூகங்களுக்கு இடையில் சக வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் சர்வதேச இனத்துவ கற்கைகளுக்கான நிலையம் வட மாகாணத்தில் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் தென் மாகாணத்தில் மாத்தறை, காலி ஆகிய மாவட்டங்களிலும் சக வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கான ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமாயின், அங்கு மத ஐக்கியம், புரிந்துணர்வு என்பன காணப்பட வேண்டும். அப்போதே நிறைவான அபிவிருத்தியைக் காண முடியும். இலங்கையில் மதங்களுக்கு இடையிலான சக வாழ்வை மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையின் ஊடாக வளர்க்க வேண்டும். கடந்த காலத்தில் நாம் பல இன்னல்களை சுமந்து வாழ்ந்தோம். அதன் காரணமாக ஒவ்வொரு இனத்தவரும் மற்றவரை வேற்று மனப்பான்மையுடன் பார்த்த வரலாறு உண்டு. அந்த நிலைமை மாற வேண்டும். நாம் நிம்மதியாக வாழ்ந்தால்தான் எதிர்கால சமூகம் நிம்மதியாக வாழும்.- என்றார். (ச)

## பொலிஸ் உத்தியோகத்தர் தாக்கினார் என மட்டக்களப்பு விகாராதிபதி முறைப்பாடு!

மட்டக்களப்பு, மே 26

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னைத் தாக்கினார் எனக் கூறி மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி வண. அம்பிட்டிய சுமணரத்தின தேரர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் பாதுகாப்புக் கடமைக்காகச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும், மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி வண. அம்பிட்டிய சுமணரத்தின தேரருக்கும் இடையில் ஏற்பட்ட உரையாடல் வாக்குவாதமாகி, கைகலப்பாக மாறியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் போதையில் வந்து தன்னைத் தாக்கி, அவதூறான வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டார் எனத் தனது முறைப்பாட்டில் தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, மேற்படி பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக தேரர் புதன்கிழமை இரவு போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர் தலைமறைவாகியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம் என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ச)


# இந்தியாவும் ஜப்பானும் இணைந்து இங்கு எரிவாயு இறக்குமதி முனையம் அமைக்கும்

கொழும்பு, மே 26

இந்தியாவும் ஜப்பானும் இணைந்து இலங்கையில் 25 கோடி டொலர் செலவில், திரவ இயற்கை எரிவாயு இறக்குமதி முனையத்தை உருவாக்கவுள்ளன.

இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடுகளுக்கு எதிராக ஜப்பானும், இந்தியாவும் இணைந்து முன்னெடுக்கும் முதல் கூட்டு நடவடிக்கை இது என்று இந்தியாவின் பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு, 2 மில்லியன் தொன் திரவ இயற்கை எரிவாயு இறக்குமதி முனையம் ஒன்றை இலங்கையில் நிறுவும் திட்டத்தை இந்தியாவின் மிகப்



பெரிய எரிவாயு இறக்குமதி நிறுவனமான பெட்ரோநெற் கடந்த ஆண்டு முன்மொழிந்திருந்தது.

இந்தத் திட்டத்தில் ஜப்பானும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை விருப்பம் வெளியிட்டது.

இந்த நிலையில், இந்தியாவின் பெட்ரோநெற் மற்றும் ஜப்பானிய நிறுவனம் என்பன 50:50 என்ற விகிதத்தின் அடிப்படையில் கூட்டு முயற்சியாக திரவ இயற்கை எரிவாயு இறக்குமதி முனையத்தை அமைப்பதற்கு இலங்கை, இந்தியா, ஜப்பான் அரசுகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது என்று பெட்ரோநெற் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரபாத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெட்ரோநெற் நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியாக இந்தத் திட்டத்தை செயற்படுத்தவுள்ள நிறுவனத்தை ஜப்பானிய அரசு இன்னமும் முடிவு செய்யவில்லை.

கரவெலப்பிட்டியில் இந்த முனையம் அமைக்கப்படும். இறக்குமதி முனையத்தை கட்டுவதற்கு இரண்டரை தொடக்கம் மூன்று ஆண்டுகள் தேவைப்படும். இதன்மூலம் கப்பல்களில் இருந்து குளிரூட்டப்பட்ட திரவ எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியும்.

கரவெலப்பிட்டியவில் உள்ள மின் நிலையத்துடன் இணைந்ததாக, 300 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட எரிவாயு மின்திட்டத்தை இலங்கை ஆரம்பிக்கவுள்ளது.

அங்கு தற்போது, எண்ணெயினால் இயக்கப்படும் மின் நிலையம், எரிவாயு இறக்குமதி முனையம் செயற்படத் தொடங்கியதும், எரிவாயு மின் நிலையமாக மாற்றப்படும்.

திரவ எரிவாயு மலிவானது என்பதால், பல நாடுகள் தமது மின் திட்டங்களை திரவ எரிவாயு திட்டங்களாக மாற்ற ஆரம்பித்துள்ளன.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமைதியைச் சீர்குலைக்க முனைவோர் மீது நடவடிக்கை!

## ஆஸ்திரேலியாவில் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மே 26

நாட்டின் அமைதியை சீர்குலைக்க முற்படுவோர், அவர் யாராக, எந்த நிலையில் இருந்தாலும், அவர்கள் மீது பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுங்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கான்பெராவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும்



வகையில் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில், ஒரு குழுவினர் நாட்டைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அரசை நெருக்கடிக் குள்ளாக்க முயற்சிக்கின்றனர். அத்தகைய செயற்பாடுகளை அரசியல் சூழ்ச்சியாகவே நான் பார்க்கிறேன்.

இலங்கையில் அமைதியையும் ஒற்றுமையையும் உருவாக்கும் வகையிலேயே 19 ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கீத் நொயார் மீதான தாக்குதல் சம்பவத்தில் 6 புலனாய்வாளர்களுக்கும் நேரடித் தொடர்பு!

## நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, மே 26

ஊடகவியலாளர் கீத் நொயார் மீது தாக்குதல் நடத் தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இராணுவ மேஜர் உள்ளிட்ட ஆறு இராணுவ புலனாய்வுப் பிரிவினரும், அந்த தாக்குதல் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என சட்டமா அதிபர் நேற்று முன்தினம் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகியிருந்த மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் ரொஹாந்த அபேசூரிய மேற்கண்ட விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்



பேரில் கைது செய்யப்பட்டிருந்த இராணுவ மேஜர் உள்ளிட்ட ஆறு இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கும் கல்கிஸ்சை நீதிமன்றம் அண்மையில் பிணை வழங்கியது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டமா அதிபர் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகியிருந்த மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் ரொஹாந்த அபேசூரிய தெரிவிக்கையில்-

ஊடகவியலாளர் கீத் நொயார் தொம்பே பிரதேசத்தில் குடியிருப் பொன்றில் வைத்துதாக் குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

கீத் நொயார் கடத் தப்பட்ட இடத்தில் இருந்து தொம் பேயில் அவர் தங்கிருந்த குடியிருப்பு வரையிலான வீதியில் தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்தை இராணுவ புலனாய்வு பிரிவு உறுப்பினர் பயன்படுத்தியுள்ளனர் என்று அவர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் கீத் நொயார் மீது கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி தாக்குதல் நடத் தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனேடிய கடற்படையின் பசுபிக் தளபதி இலங்கைப் பாதுகாப்புச் செயலருடன் பேச்சு!



கொழும்பு, மே 26

கனடாவின் பசுபிக் மரைன் படைப்பிரிவு மற்றும் பசுபிக் கூட்டு அதிரடிப் படைப்பிரிவின் தளபதி றியர் அட்மிரல் ஆர்ட் மக் டொனால்ட் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் கொழும்பு வந்துள்ள கனேடியக் கடற்படையின் போர்க்கப்பலான எச்.எம்.சி.எஸ்.வின்னிபெக்கின் கட்டளை அதிகாரியான ஜெப்ரி ஹட்சிசன் மற்றும் கொழும்பில் உள்ள கனேடிய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் பார்க்டசோல்ட், அரசியல் வர்த்தக கொன்சியுலர் ஜெனிபர் ஹார்ட் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

# இனவாத தாக்குதல்களை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு உருவாகிறது!

கொழும்பு, மே 26

இனவாத மற்றும் மதவாத தாக்குதல்களை தடுத்து நிறுத்த விசேட பொலிஸ் பிரிவு ஒன்றை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளது.

இனவாத மதவாத அடிப்படையில் வேற்று மதத்தவர்களை துன்புறுத்தும் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டமிட்ட கும்பல்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள பூரண அதிகாரத்துடன் கூடிய விசேட பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய சட்டம் ஒழுங்கு அமைச்சின்கீழ் இந்த விசேட பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட உள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் திறமையான அதிகாரிகள் இந்தப் பிரிவிற்கு உள்வாங்கப்பட உள்ளனர்.

மத வழிபாட்டுத் தலமொன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் உடனடியாக அந்த இடத்திற்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கடமையில் ஈடுபடுத்துதல், விசாரணை நடத்துதல் மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியன இந்தப் பிரிவின் கடமைகளாகும்.

மத வழிபாட்டுத் தலங்கள் மீது திட்டமிட்ட வகையில் தாக்குதல் நடத்தும் கும்பல்கள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிக்கை ஒன்று புலனாய்வுப் பிரிவினரால் வழங்கப்படவுள்ளது.

# பலஸ்தீனத்துக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் காலமானார்



கொழும்பு, மே 26
பலஸ்தீனத்துக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் கலாநிதி திஸ்ஸ ஜயசிங்க காலமானார்.

அவர் பலஸ்தீனத்துக்கான இலங்கையின் முதலாவது தூதுவராக பணியாற்றியவர் அதேவேளை, இலங்கை பலஸ்தீன ஒருமைப்பாட்டு அமைப்பின் ஸ்தாபக செயலாளராக இருந்துள்ளார். அவர் பலஸ்தீனப் போராட்டத்துக்கு ஆதரவளித்த சமூக செயற்பாட்டாளர் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது பூதவுடல் இலக்கம் 155/27, டொலஸ்ந்த கார்டின்ஸ், தலவதுகொட இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொரளை பொது மயானத்தில் இடம்பெறவுள்ளன. (எ)

## தினசரி ராசி பலன் 26.05.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 12 ஆம் நாள். பிரதமைத்திதி இரவு 9.18 மணி வரை. பின்னர் துவிதியை. நட்சத்திரம் ரோகினி இரவு 9.04 மணி வரை. பின்னர் மிருகசீரிடம் மரணயோகம். இரவு 9.04 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் பகல் 10.33 மணி முதல் 12.07 மணி வரை. சுபநேரம் மாலை 5.52 மணி முதல் 7.21 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. வைகாசி மாதவளர்பிறை பிரதமை. பிறந்த நட்சத்திர வழிபாடு: ரோகினி.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் படிப்படியான முன்னேற்றம் காணப்படும். உத்தியோக நிலையில் அனைவரிடமும் அனுசரித்து நடந்து கொள்வார்கள்.

**ரிஷபம்:** அனுகூலமான பலன்கள் காணப்படுகின்றன. தனவரவு தாராளமாக அமையும். மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் எண்ணம் நிறைவேறும். திருமணமுயற்சிகள் அனுகூலத்தைத்தரும்.

**மிதுனம்:** கவலையான நாள். குடும்ப ஒற்றுமை பாதிக்கும். தொழில் வியாபாரரீதியாக முன்னேற்றத் தடைகளும், போட்டிபொருமைகளும் அதிகரிக்கும். எதிரிகளின் பலம்கூடும்.

**கடகம்:** யோகமான பலன்கள் காணப்படுகின்றன. தனலாபம் பெருகும். சிலருக்கு திருமணம் போன்ற சுபகாரியங்கள் சிறப்பாக நடைபெறும். சிலருக்கு வீடு, காணிவாங்கும் யோகமும் அமையும்.

**சிம்மம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு தாமதப்படும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரித்தாலும் இவர்கள் திறமையால் சமாளிப்பார்கள்.

**கன்னி:** இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். தொழிலில் சிறப்பான வருமானமும், உயர்வும் உண்டாகும். புதிய நண்பர்கள் அறிமுகம் ஆவார்கள்.

**துலாம்:** தீமையான நாள். வியாபாரத் தொழிலில் நட்டமுண்டாகும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரிக்கும். நண்பர்கள் பகைவர்கள் ஆவார்கள்.

**விருச்சிகம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். வியாபாரத்தை பெரிய முதலீடுகளில் விரிவுபடுத்தும் நோக்கம் பலனளிக்கும்.

**தனுசு:** கீர்த்தியான நாள். பொருளாதாரம் விருத்தி அடையும். வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும். கலைஞர்களின் புகழ் மேலோங்கும்.

**மகரம்:** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். வெளியூரில் உள்ள உறவினர்கள் தொழில் வழியில் எதிர்பாராத சுபலாபங்கள் கிடைக்கப்பெற்று மனமகிழ்ச்சி அடைவார்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும்.

**கும்பம்:** துன்பமான நாள். தனவரவு குறையும். உறவினர்கள் வருகை வீண் பிரச்சினைகளை உண்டாக்கும். வேலைசெய்யும் பெண்களுக்கு பணியில் சில சங்கடங்கள் உண்டாகும்.

**மீனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் தடைப்படும். எடுக்கும் முயற்சிகள் யாவும் தடையைக் கொடுக்கும். நெருங்கியவர்கள் ஏமாற்றும் சூழ்நிலை உள்ளதால் எதிலும் கவனமாக இருப்பது நல்லது.

சந்திராட்டம நாள்: கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2,ஆம் கால்கள் ஆகிய நட்சத்திர காரர் இன்று சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

# விமானப் பயணிகள் காவிச்செல்லும் கைப்பை குறித்து புதிய கட்டுப்பாடுகள்

கொழும்பு, மே 26
கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகப் பயணம் செய்யும் விமானப் பயணிகள், கைப்பையில் காவிச் செல்லக் கூடிய பொருள்கள் தொடர்பாக புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் ஒழுங்குமுறைக்கு அமையவே, இந்தப் புதிய கட்டுப்பாடுகள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளன.

புதிய நடைமுறைகளின் படி, விமானப்பயணிகள் கையில் காவிச்செல்லும் பையில் எடுத்துச் செல்லக் கூடிய திரவப் பொருள்களின் அளவு மட்டுப்படுத்தப்படவுள்ளது. இதில் திரவப் பொருள்கள் மற்றும் ஜெல் என்பன உள்ளடங்கும்.

எல்லா திரவப் பொருள்களும் வெளிப்படையான, முத்திரையிடப்பட்ட, 20 X 20 அளவுடைய பிளாஸ்ரிக் பைகளிலேயே கொண்டு செல்ல வேண்டும்.

திரவப் பொருள்கள் ஒரு லீற்றரை விட அதிகமாக இருக்கக் கூடாது.

ஒவ்வொரு பயணியும் ஒரு பிளாஸ்ரிக் பையை மாத்திரம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

மருந்துகள் மற்றும் குழந்தைகளுக்கான உணவுகள் மருத்துவரின் வழிகாட்டலுக்கு ஏற்ப அனுமதிக்கப்படும்.

மேலும், இந்தப் புதிய கட்டுப்பாடுகளுக்கு பயணிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்புச் சேவைகள் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# பாகிஸ்தான் மாணவர்கள் 8 பேர் இலங்கைக்கு நல்லுறவுப் பயணம்



கொழும்பு, மே. 26
பாகிஸ்தானைச் சேர்ந்த மாணவர்கள் 8 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இரு நாடுகளையும் சேர்ந்த மாணவர்களுக்கு இடையிலான நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் பாகிஸ்தானின் லாகூர் நகரிலிருந்து ஷாசியா ஷாகித் என்பவரின் தலைமையில் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பர். இலங்கையிலுள்ள பாகிஸ்தான் பதில் உயர்ஸ்தானிகர் டாக்டர் ஷஃப்றாஸ் அஹமத்கான் சிப்றாவை பாகிஸ்தான் தூதரகத்தில் அந்த மாணவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மேலும், அவர்கள் கண்டி மற்றும் காலி ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். (எ)

# தமிழகத்தில் தங்கி உள்ள ஈழத்தமிழர் சொந்த இடம் வருவதற்கு ஏற்பாடு

தமிழகத்தில் தங்கி உள்ள ஈழத்தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலானோர், தமது சொந்த மண்ணுக்குத் திரும்பிச் செல்வதற்கு விரும்புகிறார்கள் என்று, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு நடத்திய விசேட கருத்தரங்கில் சம்பந்தப்பட்டோர் கலந்து கொண்டு தெரிவித்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே, தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு மிகுந்த விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் எல்லாம் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வதற்கு அச்சமும் விருப்பமும் இல்லாத மனநிலையில் இருந்தவர்களில் மிகப்பலரும் இனிமேல் அங்கு செல்வதே உகந்தது என்று கருதுகிறார்கள் என்று அகதிகளுக்கான ஐ.நா.ஆணைக்குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

திருச்சி மாவட்டத்தின் விசேட துணை 'கலக்டர்' எஸ்.நடராஜன் தமது சொந்த இடத்திற்குச் சென்று வாழ்வதற்கு மக்கள் விருப்பம் தெரிவித்தனர் என்று தெரிவித்தார்.

அத்தோடு, இலங்கைக்குச் செல்வதற்கான கடவுச்சீட்டுகளை, திருச்சியில் பெறுவதற்கு அவர்களுக்கு வகை செய்து கொடுக்கலாம் என்றும் அவர் கூறியிருந்தார்.

அது மட்டுமன்றி, தமது தாய்நாட்டுக்குச் செல்ல விரும்பும் இலங்கையர்களுக்கு முந்திய மூன்று மாதங்களுக்குத் தேவையான பண உதவியை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் விசேட 'கலக்டர்' நடராஜன் தெரிவித்தார். (அ)

# புத்தளம் உப்பள ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி போராட்டம்



புத்தளம், மே 26
சம்பள உயர்வை வலியுறுத்தி புத்தளம், பாலாவியில் அமைந்துள்ள உப்பளத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் நேற்று ஆறாவது நாளாக பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊழியர்கள் கடந்த சனிக்கிழமை முதல் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் கோடிக் கணக்கான வருமானம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வுகோரி மேற்படி ஊழியர்கள் கடந்த பல நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி, கடந்த வெள்ளிக்கிழமை புத்தளம் தொழிற்திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் அதிகரித்து வழங்கப்படும் என்று அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதனை நிராகரித்த ஊழியர்கள் குறைந்த பட்சம் ஆறாயிரம் ரூபா சம்பள உயர்வேனும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த சனிக்கிழமை முதல் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

வொன்.வேணு கிருஷ்ணா




**வட கொரிய பதற்றம்: தென் கொரியா வந்தது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்; வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை; ட்ரம்ப் கோபம்**

ஜப்பானின் மேற்கிலுள்ள ஷிகோகு கடற்பரப்பிற்கு அமெரிக்க விநியோகக் கப்பலுடன் செல்வதற்காக, இஸுமோ கப்பல், டோக்கியோவின் தெற்கிலுள்ள யோகோசுகாவிலுள்ள அதன் தளத்திலிருந்து புறப்பட்டுள்ளதாக கேயோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.




பிரதமரான ஷின்சோ அபேயின் கீழ், ஜப்பான் அதனுடைய நவீன மற்றும் வலிமையான இராணுவம் செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளைப் படிப்படியாக செயற்படுத்தி வருகிறது.

கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் புதிய சட்ட திட்டங்களை முதல்முறையாக செயல்படுத்த அபே முயற்சி செய்து பார்ப்பதாக தோன்றுகிறது என்று பி.பி.சி. செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜப்பானின் தற்காப்புக்கு மட்டுமன்றி, மோதல்களுக்கு தீர்வு காண்பதற்கு ஆயுத சக்தியைப் பயன்படுத்துவதை, உலகப் போருக்குப் பிந்திய ஜப்பானின் இரண்டு அரசியல் சாசனங்களும் தடை செய்கின்றன.

கூட்டணி நாடுகள் தாக்கப்பட்டால் உதவி செய்வது என்பதால், ''கூட்டு தற்பாதுகாப்பு'' என்று அறியப்படுவதை 2015 ஆம் ஆண்டு ஜப்பான் நிறைவேற்றிய புதிய சட்டம் அனுமதித்தது.

இந்த புதிய சட்டத்தின்படி இராணுவ பயிற்சிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைக்கு அனுப்பப்படும் முதல் ஜப்பானிய போர்க்கப்பல் 'இஸுமோ' கப்பலாகும்.

இதனால், வெளிநாடுகளில் தேவையில்லாத போர்கள் உருவாகும் என்று இந்த மாற்றத்தைக் கொண்டு வந்த அபேயின் அரசு விமர்சனங்களை சந்தித்தது. ஆனால், அரசு இதனை நிராகரித்துவிட்டது.


ஜப்பானும், அமெரிக்காவும் நடத்திய சமீபத்திய கூட்டுப் பயிற்சிகள் மற்றும் பிற கடற்படை மேம்பாடுகளை தொடர்ந்து இஸுமோ இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நீரிலும், நிலத்திலும் சென்று தாக்கக்கூடிய பிரான்ஸ் கப்பல் ஒன்று, ஜப்பான், பிரிட்டன் கடற் படைப் பிரிவுகள் இணைந்து நடத்தும் பயிற்சியில் கலந்துகொள்ள ஜப்பானின் தென் மேற்கு பகுதியை சென்றடைந்துள்ளது.

தென் கொரியாவும் அமெரிக்காவோடு கூட்டு இராணுவப் பயிற்சியை நடத்தியிருக்கிறது.

சீனாவும் அதனுடைய இரண்டாவது விமானந்தாங்கியை கடந்த வாரம்தான் வெள்ளோட்டம் விட்டுள்ளது.

**வடகொரிய ஏவுகணைகளை அழிக்க இயங்கத் துவங்கியது அமெரிக்காவின் ''தாட்'' தடுப்பு முறை**



**தென் கொரியாவில் சர்ச்சைக்குரிய தாட் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பு தற்போது செயற்பாட்டுக்கு வந்துள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.**

ஏவுகணை அமைப்பு ''தொடக்க இடைமறிப்புத் திறன்'' கொண்டதாக மட்டுமே உள்ளது என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தஏவுகணைப்பாதுகாப்புஅமைப்பு முழுமையாகச் செயற்பட இன்னும் சில மாதங்கள் ஆகும் என்றாலும் இது வடகொரியாவின் ஏவுகணைகளை இடைமறிக்கும் என்று கூறப்படுகிறது.

வடகொரியாவில் இருந்து வரும் தொடர் அச்சுறுத்தல்கள் மற்றும் அமெரிக்க போர்க் கப்பல்கள் மற்றும் நீர் மூழ்கிக் கப்பலின் இருப்புக் காரணமாக கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துவருகிறது.

சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளுக்கு வட கொரியா கோபமாக பதிலளித்தது. மேலும், அமெரிக்கா ஓர் அணு ஆயுதப் போரை ஏற்படுத்தும் அபாயத்தில் உள்ளதாகவும் குற்றம் சாட்டியது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வட கொரிய அதிபர் கிம் ஜோங்-'உன்னை சரியான தருணத்தில் சந்தித்தால் பெருமைப்படுவேன்' என்று கூறிய அடுத்த நாள் இந்தப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் அமெரிக்கா தாட் ஏவுகணை அமைப்பை நிறுவப் போவதாக அறிவித்தது. ஆனால் இது 2017ஆம் ஆண்டு இறுதியில்தான் பயன்பாட்டுக்குவரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அந்தஏவுகணைபாதுகாப்புஅமைப்பு, தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும், அருகில் உள்ளவர்களின் வாழ்க்கையை ஆபத்தில் சிக்கவைக்கலாம் என்றும் பல உள்ளூர்வாசிகள் நம்புகின்றனர்.

தனது இராணுவ செயற்பாடுகளில் அந்த அமைப்பு தலையிடுகிறது என்று சீனா நம்புகிறது. அதனால் இந்தஅமைப்பைச்சீனாவும்கடுமையாக எதிர்க்கின்றது. ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு நிறுவுதல் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று கோரியது.

''நமது நலன்களை பாதுகாக்கத் தேவையான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்று சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கெங் ஷுவாங் தெரிவித்தார்.

அதே நேரத்தில், கிம் ஜோங்-உன்னை சந்திப்பது தொடர்பாக ட்ரம்ப் விருப்பம் வெளியிட்டிருப்பதை வரவேற்ற அவர், அதேவேளை, ''பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனைகள்தான் அணுவாயுதமயமாக்கலைத் தடுக்கும் உண்மையான மற்றும் சாத்தியமான வழி '' என்றும் கூறியுள்ளார்.

தாட் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு கடந்த ஆண்டு வெளியானதும், வடகொரியா ''பொருத்தமான பதிலடி'' தரப்போவதாகவும், அரசு ஊடகத்தில், ''இரக்கமற்ற பதில் தாக்குதல் நடத்துவதுதான் எங்களது இராணுவத்தின் தீர்க்கமான விருப்பம்,'' என்றும் தெரிவித்தது.

தாட் ஏவுகணை தற்போது கொரியாவைப் பாதுகாக்கும் திறன் கொண்டது என்று அங்குள்ள அமெரிக்கப் படையின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.



ஆனால் தாட் ஏவுகணை அமைப்பு ''தொடக்க இடைமறிப்பு திறன்'' கொண்டதாக மட்டுமே உள்ளது என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் இந்த ஏவுகணையின் பெரும்பாலான பகுதிகள் வந்து சேருவதால் அது பலப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

சமீப வாரங்களில், ஐ.நாவின் ஏவுகணைச் சோதனை மீதான தடையை தொடர்ந்து மீறிவரும் நேரத்தில், வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே சூடான வாக்குவாதங்கள் நடந்துவருகின்றன.

(கேள்வி தொடரும்...)



# கண்ணியமாய்த் தன் கட

# உயர்திரு. பொ.சிவானந்தராஜா அவ

[26.05.2017– வெ



## நல் மாணாக்கரை உருவாக்கியவர்

சைவமும் தமிழும் இனிதே மிளிரும் யாழ்ப்பாண நன்நகரின் விளங்கு புகழ் சான்றோர் உருவான தீவகத்தின் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து இம் மண்ணிற்கு பல ஆயிரம் கற்றவர் மாணவ சமுதாயத்தை உருவாக்கி அளித்த திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் மணி விழாக்காணும் இவ்வேளை அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது மன நிறைவை தருகின்றது.

'எழுத்தறிவித்தவன் இறைவன்' ஆனாலும் இவ் ஆசிரியத் தொழிலை அந்த இறைவனாலும் ஆற்ற முடியாது. அப்படிப் பட்ட பணியில் சிவானந்தராஜா பல வருடங்கள் சேவையாற்றி, இந்தச் சமூகத்துக்கு நல்ல ஒழுக்கசீலர்களாக, மற்றவர்களுக்கு வழி காட்டியாக உள்ள நல்லதொரு மாணவர் பரம்பரையை உருவாக்கிச் செல்வது இறைபணி என்றே கருதுகின்றேன். அவர்தம் ஓய்வுக் காலத்தில் மன நிம்மதியாக உடல் நலத்தோடு வாழ எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி.



## நயினையைக் கவனித்தவர்

யாழ்ப்பாணத்தின் இதயபூமி என்று சொல்லப்படுகின்ற தீவகத்திலே நீண்டதொரு கல்விப் பாரம் பரியம் தோன்றி வளர்ந்திருக்கின்றது. அதில் குறிப்பிட்ட கட்டத்திலே இணைந்து கொண்ட பொன்னம்பலம் .சிவானந்தராஜா அவர்கள் அர்ப்பணிப்புள்ள கல்விச் சேவையை வழங்கியுள்ளார் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஏனைய சார்பு வளங்கள் தீவகத்தில் மிகக் குறைவாக உள்ள போதும் இருக்கின்ற வளத்தைக் கொண்டு உச்சப்பயனைப் பெற்றுவிட யாவரும் முயற்சித்தல் சிறப்பானது. இந்தக்கால கட்டத்திலே வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரியினுடைய ஓய்வு சிறு மனவருத்தத்தைத் தந்தாலும் இது கட்டாயமானது என்ற அடிப்படையிலேயேயும் அவருடைய குடும்பத்தாருடன் மகிழ்ச்சிக்குரிய காலமாக அது அமையவேண்டும் என்ற வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதொன்று.

குறிப்பாக கடல் கடந்த தீவுப் பாடசாலைகளிலும் அதிலும் நயினாதீவுப் பாடசாலைகளில் இவருடைய தரிசிப்பும், கண்காணிப்பும் அதிகமாய் இருந்ததை நான் அவதானித்திருக்கின்றேன். 38 வருட கல்விச் சேவையைப் பூர்த்தி செய்கின்ற பொ. சிவானந்தராஜா அவர்கள் நல்லாசானாக திறமைமிகு அதிபராக, வினைத்திறன் கூடிய கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெறுகின்றமை உண்மையில் போற்றுவதற்கும், வாழ்த்துதற்கும் உரியது. எனவே, ஓய்வுக் காலத்தில் அவர் மகிழ்ச்சியாக மனநிறைவோடு வாழ வேண்டும் என ஆசி கூறுகின்றேன்.

விகாராதிபதி
வண.நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ
நாயக்கதேரோ.



# பொன்னம்பலம் சி

(Sp.Trd.Science, B.Ed (Hon

S.L.P.S

(கோட்டக்கல்விப் பணிப்

தந்தை: இராசையா பொன்னம்பலம்
தாய்: பொன்னம்பலம் நாகம்மா
மனைவி: சி.இராஜேஸ்வரி
பிள்ளைகள்
சிவபிருந்தன் (கொழும்பு)
சிவவதனி (லண்டன்)
மருமக்கள்: சி.துளசி
த.விமலாகரன் (லண்டன்)
பேர்த்தி: வி.விமிதா



## சமூகத்தை மேம்படுத்தும் நல்ல ஆசிரியர்

திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா 1979 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 வரை மொத்தமாக 38 வருடங்கள் அரச பணியில் ஆசிரியராக, அதிபராக வவுனியா மாவட்டத்திலும் யாழ். மாவட்டத்திலும் கடமையாற்றியுள்ளமையுடன் அவரது சேவையின் நிறைவாக நான்கு வருடங்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளராக யாழ்.மாவட்டத்திலுள்ள வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்திலும் கடமையாற்றினார்.

அவர் தனது சேவைக்காலத்தில் கல்வியுடன் அறம், ஒழுக்கம் ஆகியவற்றைக் கற்பித்து இளம் சமூகத்தை நெறிப்படுத்தி நல்லாசிரியனாக ஓர் உத்தமமான கல்வி யியலாளனாக மிளிர்ந்திருப்பார். அவர் தனது ஓய்வுக் காலத்தில் உடல் - உள ஆரோக்கியத்துடன் பூரண ஆயுளுடன் தனது அன்புக்குரிய குடும்ப உறவுகள் சகிதம் அமைதியும் ஆனந்தமும் மிக்க வாழ்வைப் பெற இறை வனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

றெஜினோல்ட் கூரே,
ஆளுநர்,வடமாகாணம்.



## எழுத்தறிவித்த இறைவன்

எழுத்தறிவித்தவன் இறைவனாவான், என்ற முதுமொழிக்கு அமைவாக கற்பித்தல் பணியைக் கடந்த 38 ஆண்டுகள் சிறப்புற நடத்தி ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பல பதவிகளை வகித்தமையுடன் மட்டும் நின்றுவிடாது கற்பித்தலுடன் இணைந்து தம்மையும் கல்விப் புலத்தில் வளப்படுத்திக் கொண்ட இப் பெருமகனின் ஓய்வு கல்வித் துறைக்கு ஒரு இழப்பாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

அறுபது வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவது என்பது தவிர்க்க முடியாத ஓர் விடயமாக உள்ளபோதிலும் ஓய்வு காலத்திலும் தமது ஆற்றலையும் அறிவையும் வடபுலத்தின் கல்வி மேம்பாட்டுக்கு அர்ப்பணிக்க முன்வர வேண்டும் என இந்தத்தருணத்தில் வினயமாக வேண்டுவதுடன் அவரின் ஓய்வு காலம் சுபீட்சமானதாகவும் சுகபலத்துடன் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்,
முதலமைச்சர்,வடமாகாணம்.



## மகத்தான சேவையாளன்

வேலணைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் ஆசிரியராக சேவை ஆற்றி படிப்படியாக வளர்ந்து கோட்டக் கல்விப் பணிப்பாளராக 4 வருடங்கள் சேவையாற்றி, இன்று மணிவிழா நாயகனாக வீற்றிருக்கிறார். அவரது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகிறேன்.

வெறுமனே கல்வியை போதிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது மண்ணில் பிறந்த குழந்தை வாழ்வில் நெறி பிறழாது வாழத் தேவையான ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொது அறிவு போன்றவற்றையும், மாணவ சமூகத்துக்கு தேவையான ஆற்றல், ஊக்கம்,விடாமுயற்சி, தன்னம்பிக்கை அனைத்தையும் அவர்களுக்கு உட்புகுத்தி, பண்புள்ள மானுடர்களாக உருவாக்கி சமூகத்துக்கு வழங்குவதில் ஆசிரிய சேவை மகத்தானது. இவ்வாறே தனது உன்னத பணியை செவ்வனே செய்து தன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா.

இவரது இளைப்பாற்றுக் காலத்தில் மனநிறைவுடன் மகிழ்வாக வாழ வாழ்த்துவதோடு, மணிவிழா சிறப்புடன் நடைபெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ந.குருகுலராசா
கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்.



## பண்புமிக்க நல்லாசான்

திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா ஆரம்பக்கல்வியை காரைநகர் யாழ்ரன் கல்லூரியிலும் இடைநிலை மற்றும் உயர் நிலைக் கல்வியினை யாழ்.மத்திய கல்லூரியிலும் கற்றுக்கொண்டார். விஞ்ஞான விசேட பயிற்சியினை NIE யிலும் கல்விமாணிப்பட்டத்தினையும் பெற்று பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமாவினை பெற்ற அதேவேளை நல்லாசிரியராக முதலாந்தர அதிபராக விளங்கிய பெருமைக்குரியவர். 38 வருடங்களாக நல்லாசானாக, அதிபராக மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளராக கல்விச் சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றி மணிவிழா காணும் இவ்வேளை வெளியீடு செய்யும் சிவா பத்திரிகை மலருக்கு முழு முயற்சியுடன் முனைந்திருப்பது போற்றுதற்குரியது. மணிவிழா நாயகன் பண்பின் சிறப்பை பார்புகழ மெச்சுவதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் இறைவனைப் பிரார்த்தித்து என் நல் வாழ்த்துக் களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நா.வேதநாயகன்.
அரச அதிபர், யாழ். மாவட்டம்.

## சேவை விவரம்

1. வ/புளியங்குளம் G.T.M.S- ஆசிரியர்- 01.
2. வ/கோவில் புதுகுளம் A.M.T.M.S ஆசிரி
3. பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை ஆ.மா
4. வவுனியா CCTM School - ஆசிரியர்- (
5. வவுனியா மகா வித்தியாலயம் ஆசிரியர் -
6. யாழ்ரன் கல்லூரி - காரைநகர் - ஆசிரியர்
7. யா/சென் மேரிஸ் வித்தியாலயம் (O.L.R) .
8. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி- ஆசிரியர்
9. யா/ கோப்பாய் மகா வித்தியாலயம் - அதிப
10. காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் - 16.0
11. கோட்டக் கல்வி அலுவலகம் வேலணை கே

சேவைக்காலம் – 38 வருடங்கள் [கோட்டக
கோட்டக் கல்விப் பணிப்பாளர் 04 வருடங்
சொந்த முகவரி: சல்லை, காரைநகர்.



## நல்ல ஆசிரியர், அதிபர், அதிகாரி

வேலணைக் கல்விக் கோட்டத்தில் கோட்டக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.பொ.சிவானந்தராஜாவின் சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

விஞ்ஞான பாடத்தில் விசேட பயிற்சியுடன் கல்வி மாணிப் பட்டத்தினையும் பெற்ற இவர் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியராகச் சிறந்த பணியினை ஆற்றியவராவார்.தனது சிறப்பான ஆசிரியப் பணி காரணமாக அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு அதிபர் பணியினையும் சிறப்பாக ஆற்றியுள்ளார். சிறப்பான அதிபர் பணியின் காரணமாக 2013 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வில் செல்கின்றார். கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் தீவக வலயத்தினது கல்விச் செயற்பாடுகளுக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

இவரது 38 வருட கல்விப் பணியில் இவர் ஆற்றிய சேவை களுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

செ.உதயகுமார்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்




## பாராட்டுதற்குரிய கல்விச்சேவை

யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சிவானந்தராஜா 1979 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 வரை ஆசிரியராக யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரையில் உள்ள பிரபல பாடசாலைகளில் (யாழ். இந்துக் கல்லூரி உட்பட) கடமையாற்றியுள்ளார்.

மேலும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆண்டு வரை யாழ்/கோப்பாய் மகாவித்தியாலயம், யா/ டாக்டர் தியாகராஜா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். 2013 இல் கோட்டைக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று வேலணையில் இன்றுவரை கடமையாற்றி ஓய்வுபெறு கின்றார். எல்லாமாக 38 வருடங்கள் கல்விப் புலத்தில் சேவையாற்றியுள்ளார்.

இவரது 38 வருட சேவையைப் பாராட்டுவதுடன் அவருடைய சேவை கல்விப் புலத்திற்குத் தொடர அவர் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று இறை வனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் சி.விக்கினேஸ்வரன்,
உபவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## மாயைகள் தவிர்த்

வாழ்த்தி எழுத முடியவில்லை - அதனால்
வணங்கி எழுதுகின்றேன்...!

1979 ஆம் ஆண்டு என்தாயின் கருவறையில்
வெளிவந்து விழித்துப் பார்த்தேன் - புளியங்குளத்தில்
அதிபர் அறையில் கடமையேற்று கையொப்பம் இடுகிறீர்கள்
உங்கள் குணத்திலும் குறை என்றும் இல்லை
கடமையிலும் கறையொன்றுமில்லை இந்த
அதிசயம் 38 வருடங்கள்
எப்படி உங்களால் சாத்தியமானது...?
கற்றுத்தாருங்கள் ஏனென்றால் நானும்
நடக்க வேண்டிய நீண்ட தூரம் இருக்கிறது...
பதவிக்காய் பணியாத நிமிர்ந்த நெஞ்சு - தீயதை
எதிர்க்கும் துணிவு

பாலையும் நீரையும் பிரிக்கும் பக்குவம் - நீங்கள்
மிதித்த புல்லும் நிமிர்ந்து பார்க்கும் பாசம்

**இந்த மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், நிதிப் பங்களிப்புக்கள் வழங்கிய அனைத்துப் பெருந்தகைகளுக்கும் கோடி நன்றிகள் உரித்தாகட்டும்.**

**தொகுப்பு: திரு. T. தயாபரன்**
ஆசிரியர் மண்டைதீவு ம.வி.
**செயலாளர்:** இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தீவகம்.
**திரு. P. பகீரதன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர், கோட்டக்கல்வி
அலுவலகம், வேலணை.

# கடமையில் உயர்ந்தோன்

## வர்களின் மணி விழா சிறப்பு மலர்

(வெள்ளிக்கிழமை)





ம் சிவானந்தராஜா

Ed (Hons), Dip.in School Mgt)

S.L.P.S- I

ப் பணிப்பாளர், வேலணை)

லம்

கல்வி: ஆரம்பக் கல்வி: யாழ்ரன் கல்லூரி, காரைநகர்.

இடைநிலை உயர் நிலைக் கல்வி: யாழ். மத்திய கல்லூரி

தொழிற் தகைமைகள்:

★ விசேட பயிற்சி விஞ்ஞானம் கல்விமாணி NIE

★ பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா NIE

சிரியர்– 01.03.1979 - 26.06.1980
M.S ஆசிரியர் - 27.06.1980 - 18.01.1982
லை ஆ.மாணவர் - 19.01.1982 - 31.12.1983
ஆசிரியர்– 01.01.1984 - 30.01.1986
ஆசிரியர் - 01.02.1986– 31.12.1988
- ஆசிரியர்– 01.01.1989– 31.05.1992
(O.L.R) ஆசிரியர்– 01.06.1992– 31.12.1997
- ஆசிரியர்– 01.01.1998 - 31.12.2005
ம் - அதிபர்– 01.01.2006– 15.06.2010
திபர் - 16.06.2010 - 14.02.2013
லணை கோ.க.ப - 15.02.2013 - 26.05.2017

ர் [கோட்டக்கல்விப் பணிப்பாளர் உட்பட]
04 வருடங்கள்.
நகர்.

## விர்த்து அம்புகள் ஏற்றவர்...

ல்
ரயில்
குளத்தில்
கள்

வேடம் போடாத வெளிப்படை
நடிப்புக்கும் வளையாத நாக்கு...!
ஆற்றல் உள்ளவனை அரை நொடிக்குள்
அடையாளம் காணும் திறன்...
பூனை செல்லும் சிறிய வழிக்குள்
யானையை கூட போக வைக்கும் பேராற்றல்...!
ஐயா! ஆண்டவா - எப்படி
இந்த ஆறடி மனிதனுக்கு அற்புத ஆற்றல் கொடுத்தாய்?
தொடர்ந்து வருகின்றோம் - Sir please
கற்றுத் தாருங்கள்
அம்புகளை ஏற்று, மாலைகளை வெறுத்த
பீஷ்மரே இன்னும் இன்னும் இனிதே உயருங்கள்
வணங்குகின்றேன்...

T. தயாபரன்
ஆசிரியர் மண்டைதீவு மகாவித்தியாலயம் செயலாளர்,
இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், தீவகம்.



### கல்விப் பணியே இறைபணி

கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளாகக் கல்விச் சேவையில் ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக அரும்பெரும் சேவையாற்றி ஓய்வுபெறும் எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய உயர்திரு பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களுக்கு எமது யாழ்ப்பாண கத்தோலிக்க மறைமாவட்டம் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

கல்விப்பணிக்கென தான் பெற்றுக்கொண்ட அழைப்பை இறைபணியாக ஏற்று, அப்பணியின் தாற்பரியத்தைத் தெளிவாக உணர்ந்து, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கல்விச் சமூகத்தை ஒரு சொத்தாக மதித்து இவர் ஆற்றிய அளப்பரிய பணியினால் பலனடைந்து, வாழ்வில் உயர்ந்து நிற்கும் ஒவ்வொரு உள்ளம் சார்பாகவும் எமது நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

இலங்கைத் தீவிலேயே மிகவும் நெருக்கடிகளும், கஷ்டங்களும் நிறைந்த தீவகத்தில் அவற்றைப் புரிந்து கொண்டு மத வேறுபாடின்றி மனித மாண்பினை மதித்து இவரால் மேற்கொள்ளப்பட்ட பல வெற்றிகரமான முன்னெடுப்புகளுக்காகவும் அதனால் மக்கள் அடைந்த நன்மைகளுக்காகவும் எமது மனப் பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இறை ஆசீர் இவர்மீது நிறைவாகப் பொழியப்படவும், அமைதியோடும், மகிழ்ச்சியோடும், நல் ஆரோக்கியத் தோடும் தனது ஓய்வுகாலத்தில் இன்புற்று வாழவும் அன்போடு வாழ்த்தி நிற்கின்றோம்.

அருட்திரு ப.யோ.ஜெபரட்ணம்,
குரு முதல்வர்,
யாழ்.கத்தோலிக்க மறைமாவட்டம்.



### நற்சமுதாயத்தின் சிற்பி

எப் பணியாலும் பெரிய பணி ஆதலின் கல்விப் பணியே உயர்ந்த பணி. இறைவனால் படைக்கப்பட்ட குழந்தைகள் தாய், தந்தைக்குப் பிறகு குருவிடமே ஒப்படைக்கப்படுகின்றார்கள். அவனை இந்த உலகுக்கு நல்லவனாகக் கொடுக்கின்ற பாரிய பொறுப்பு ஆசிரிய சமூகத்திடமே ஒப்படைக்கப்படுகின்றது. இறைவனாலே கண்காணிக்கப்படுகின்ற இந்த உலகில் தரமான ஒரு சமுதாயத்தை உருவாக்குதல் மிகச் சிறந்த ஆசிரிய பணி. அதனை ஏற்று திரு.பொ.சிவானந்தராஜா அவர்கள் திறம்பட தன் பணியை நிறைவேற்றியிருக்கின்றார். இந்தத் துறையில் நீண்ட காலம் பணியாற்றிய அவர் ஆளுமை மிக்க ஒரு மாணவர் சமுதாயத்தையும் ஆக்கியளித்துள்ளார். இன,மத பேதமின்றி இவர் ஆற்றிய பணி போற்றுதற்குரியது.

கல்வித் தன்னிலும் கைப் பொருள் தன்னிலும் கல்வியே அதி சிறப்பானது என்பதை அகத்தில் இருத்தி அள்ளி அள்ளித் தெளித்து அறிவை வளர்த்து ஆளானவர்கள். அன்னாரை மறவார் என்றும்!

ஆதலால் அன்னாரின் நீண்ட வாழ்வுக்கும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்!

அஸ்ஸலாம்
இங்ஙனம்- அல்ஹாஜ் எம்.எம்.ஏ.அஸீஸ்
மௌலவி (காஸிமி)
யாழ்/ கிளி/ மாவட்ட உலமா சபை சர்வமதத் தலைவர்.



### மென்வாக்கும் இன்முகமும்

"அறிஞர்க்கு அழகு கற்று ணர்ந்து அடங்கல்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கு அமைவாக கல்வி கேள்விகளால் உயர்ந்து, அன்பும் அடக்கமும் மானிடப் பண்பும் அழகூட்ட, பல்துறை ஆற்றல்களால் கல்வித்துறையை அலங்கரித்த வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு. பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களது அறுபதாவது அகவையில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி கற்கும் காலத்தில் சிறந்த மாணவனாகவும், பின் பல்வேறு பட்டங்களையும் பெற்று வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளராக நான்கு வருடங்கள் திறம்படப் பணியாற்றினார்.

போராட்ட காலங்களில் பெரும் பாதிப்புக்குட்பட்டிருந்த இந்தப்பிரதேசத்தை மீண்டும் 34 வருடங்கள் சிறந்த ஆசிரியராகவும் பணி புரிந்து 15.02.2013 தொடக்கம் மீண்டும் தொடங்கும் மிடுக்குடனும் புது உத்வேகத்தை ஊட்டிய பெருமை இவரையே சாரும். அழிக்கப்பட்ட வேலணை மண்ணை அழகூட்டி கல்வியறிவைப் புகட்டி மக்கள் மனதிலும் மாணவர் மனதிலும் உள்ள அறியாமையை அகற்றி அறிவை ஊட்டி பல் துறைப் பரிமாணப் பாங்குடைய பண்பாலும் திறனாலும் தலைகொணவோர் செயலொழுங்குப் பாணியும் துணிவும் ஒருங்கே இணைந்த ஆளுமைமிக்க இவர் மென்வாக்காலும் இன்முகத்தாலும் மாற்றாரையும் கவர்ந்து செயலாற்றும் திறன் கொண்ட கல்விச் சிந்தனையும் கால நேர நெருக்கடியிலும் தன் கடன் பணி செய்து கிடப்பதே என வாழ்ந்தவர் என்றால் மிகையில்லை.

கற்றுணர்ந்த குணவோன் தனை, கல்லை, காரைநகரின் மைந்தனை அறுபது அகவையாம் மணிவிழா நாளில் சீரும் சிறப்பும் பேரும் புகழும் கொண்டு நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி.விஜயகலா மகேஸ்வரன் (நா.உ)
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும்,
யாழ்.கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு
இணைத்தலைவரும்.



### ஆற்றல் மிகுந்த ஆசிரியர்

பலகாலம் நிறைபணி செய்து படிப்படியாய் உயர்ந்து அதனால் எல்லோர் மனதிலும் நிற்கின்ற உயர்திரு.பொன்னம்பலம்.சிவானந்தராஜா அவர்களிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அறமும் ஆன்மீகமும் நிறையவே நிரம்பப் பெற்ற யாழ்ப்பாணத்தில் தக்க வழி சான்றோர் சமுதாயத்தைத் தன்னகத்தே கொண்ட தீவகத்தில் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து இன்று அகவை 60 வதுடன் ஓய்வுப் பெற்றுச் செல்லுகின்ற பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் இயல்பிலே ஆன்மீக சிந்தனை அதிகம் கொண்டவர். ஆற்றல் மிகுந்த ஆசிரியராக தன் பணி தொடங்கி 29 வருடங்கள் நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்க உழைத்தவர். அதில் வெற்றியும் கண்டவர். விஞ்ஞானத்தை நல்லதொரு விளைத்திறன் காட்டினாலும் அதற்குள் மெய்ஞானத்தையும் கலந்தவர். செயற்திறன் மிக்க அதிபராக 7 வருடங்களை இனிதே நிறைவு செய்து நீண்ட தொரு கல்விப் பாரம்பரியத்தைத் தொடக்கி வைத்து வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக தன் ஓய்வுக் காலத்தை நிறைவு செய்கிறார். எம் தீவக கல்வி வளர்ச்சியிலே தனக்குரிய இடத்தை தக்க வைத்துக் கொண்டு இன்று எல்லோர் மனதிலும் நிறைவானதொரு நிலையெய்தி ஓய்வு பெறுகிறார்.

டக்ளஸ் தேவானந்தா
(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)
(செயலாளர் நாயகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)



### விட்டுக்கொடுப்பும் வீண்வசை பாடாமையும்

நல்ல கணவராக, நல்ல சிரிப்பனாக, நல்ல நண்பனாக, நல்ல தந்தையாக, பாராட்டுமிக்க அதிபராக, பண்பான அதிகாரியாக பரிணமித்து ஓய்வுபெறுகிறார் நண்பன் சிவானந்தராஜா.

சிவானந்தராஜா எப்போதும் மகிழ்வான சிரிப்போடு நடமாடும் உன்னதமான நண்பன். யாழ்ப்பாண மத்திய கல்லூரி பெற்றெடுத்த அருமைக் குழந்தை, யாழ். மத்திய கல்லூரியின் மைந்தர்களுக்கே உரித்தான உன்னத பண்புகள் பலவற்றைப் பறைசாற்றி நிற்கும் நல்ல மனிதன். பாடசாலைகளிலும், கல்வி நிலையங்களிலும் புகழ்பூத்த விஞ்ஞானபாட ஆசிரியராக விளங்கியவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இக்கட்டான காலகட்டத்தில் நீண்ட காலம் ஆசிரியப்பணி செய்து பலநூறு மாணவர்களின் உயர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்த நண்பன் என்ற வகையில் பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியவர். எல்லோருடனும் இசைந்து பழகும் பக்குவத்தை இவரிடமே நாம் கற்க வேண்டும். விட்டுக் கொடுப்புக்களும், வீண் வசைபாடாமையும் இவரிடம் உள்ள அரிய குணம். சிரித்துக் கொண்டு முகத்தெதிரே பேசுகின்ற பாங்கு இவருக்கே உரித்தானது.

சிவாவுக்கு அகவை அறுபதே தவிர... சிவாவின் துடிப்புக்கு இப்பொழுதும் பதினாறே).....

சரா.புவனேஸ்வரன்,
பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.



### ஊரையும் உறவையும் நேசித்தவர்

ஆசிரிய சேவையில் கணித ஆசிரியராக இணைந்த இவர் சிறந்த பணியினை ஆற்றியவர். தொடர்ந்து யா/காரை இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணி செய்து காரை மண்ணின் மாணாக்கர் பல்துறை விற்பன்னராக ஊன்று கோலானவர். அர்ப்பணிப்புமான இவரது சேவை பாராட்டப்பட வேண்டியது.

பின் 2013 ஆம் ஆண்டளவில் தீவக வலயத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இணைந்து கொண்டார். தீவக மாணவரின் நலனிலே அக்கறையோடும், ஆசிரியர், அதிபரிடத்தே நன்மதிப்பினைப் பெற்றும் பணியாற்றிய பெருமையுடையவர்.

வசதிகளையும், வாய்ப்பினையும் பாராது சொந்த நலனை எண்ணாது, ஊரையும், உறவுகளையும் நேசித்தவர். தமது வாழ்க்கையெனும் பெரும் பயணத்தில் எமது கோட்டத்தோடு தம்மை இணைத்து உழைத்த இவரைப் பாராட்டுவதிலும் வாழ்த்து வதிலும் பெருமைப்படுகின்றேன்.

வாழ்க வளமுடன்

சு.சுந்தரசிவம்
வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்.



### நகைச்சுவையோடு நாசூக்கு...!

பணியால் சிறந்து பணிவால் உயர்ந்த பொன்னம்பலம் சிவானந்தராஜா ஐயா அவர்கட்கு வாழ்த்துரை வழங்குவதற்கு வயதில்லை என்றாலும் தந்தபணி தரமாய் அமைய வேண்டும் என்ற அவரின் வழிகாட்டலுக் கேற்பவே நானும் ஒருவனாய் வாழ்த்துகின்றேன். சிவானந்தராஜா சேர் என்றாலே தனி விசேடமிருக்கும். பல்துறை ஆளுமை கொண்ட ஆசிரியர் நிமிர்ந்து நிற்பது அவரது திறனின் அடையாளம். கடந்த நான்கு வருடங்களாக இவரது வழிநடத்தலின் கீழ் பணிபுரிந்த வாய்ப்பு எனக்கு இறைவன் அளித்த இன்னொரு கொடை. கடினமான வேலைகளைக் கூட இலகுவாய் இயன்றவரை முடிப்பார். சிக்கலான பிரச்சினைகள் எழுகின்ற வேளை யாருக்கும் பாதகமின்றி தீர்க்கமாய் தீர்மானமெடுப்பார். 38 வருட கால கல்விச் சேவையில் தான் பெற்ற அனுபவங்களை அதிபர், ஆசிரியர்களுக்குத் தனக்குரிய நகைச்சுவைப் பாணியில் நாசூக்காய் சொல்வார். 'கற்றல்- கற்பித்தல்' கடந்து நல்ல நிர்வாகியாக மிளிர்ந்தார். மத்திய கல்லூரியில் கற்றுத் தேர்ந்து இந்துக் கல்லூரியில் ஆசிரியராய் மிளிர்ந்தார். யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த இரண்டு பாடசாலைகளிலும் இவருடைய பாதங்கள் சுற்றிச் சுழன்றன. அதிபர் சேவையில் தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களைத் தொடுத்து வேலணைக் கோட்டத்தை உயர்ச்சி பெற வைத்தார். இவருடைய ஓய்வுக் காலம் சிறந்து விளங்க இறைவனை வேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.

ப.பகீரதன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கோட்டக்கல்வி அலுவலகம், வேலணை.



### ஆளுமை மிக்க நாயகன்

மணி விழாக் காணும் மணி விழா நாயகன் பேரன்பிற்கும் பெரு மதிப்புக்கும் உரிய எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதைய வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காரை இந்துக் கல்லூரி அதிபராக வரலாற்றில் தடம் பதித்து கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். பின்னர் வேலணை கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவியால் உயர்ந்தவர். பழகுவதற்கு எளியவர், இனியவர், ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாகக் கல்விப் புலத்தில் தடம் பதித்தவர். அதிபர்களை, ஆசிரியர்களை, மாணவர்களை அன்புக் கட்டுக் கோப்புக்குள் சுவாரசியமாக வைத்து நிர்வாகம் செய்யும் திறன் கொண்டவர்.

38 ஆண்டுகள் கல்விப் புலத்தில் சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஓய்வுக் காலத்தில் தமது குடும்ப உறுப்பினரோடும் சமூகத்தோடும் நல்லுறவாடி நற்பணியாற்ற மன மகிழ்வு பெற்று உடல் நலத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் அருள்பாலிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

திருமதி.சிவந்திகிரி வாகீசன்
(பிரதி அதிபர் யா / காரைநகர் இந்துக் கல்லூரி)

## அன்புடன் ஆசிரியரின் பழைய மாணவர்கள்.






# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



157

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### மூன்றாம் கட்ட சுற்றுப் பேச்சு

மூன்றாம் கட்டச் சுற்றுப் பேச்சுகள், 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 - 5 ஆம் நாள்கள் வரை ஒஸ்லோவிலுள்ள எஸ்.ஏ.எஸ்.பிளாசா விடுதியில் நடைபெற்றன.

விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் குழுவில் மாற்றம் இருக்கவில்லை. அரச பிரதிநிதிகள் தரப்பில், ரவூவ் ஹக்கீம் பங்கு கொள்ளவில்லை. உட்கட்சித் தகராறு மோசமடைந்ததால், ஒஸ்லோ வந்திறங்கிய ஹக்கீம் அன்றைய தினமே அவசரமாகக் கொழும்பு திரும்பினார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆலோசகரான எம்.ஐ.எம்.மொகுதீன் பேச்சுகளின் போது முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.

நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் உப - குழு பற்றிய விடயம் பேச்சுகளில் ஏடுத்துக் கொள்ளப்பட்டபோது தமிழர் தாயகத்தில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவத்தினரது விட்டுக் கொடாத கடும்போக்கினால் நெருக்கடி நிலைமை தீவிரமாகி வருவதாக நான் கண்டனம் தெரிவித்தேன். சிங்கள இராணுவம் தமிழ் மக்களுடன் பகை உணர்வுடன் நடந்து கொள்வதாக குற்றஞ்சாட்டிய நான், போர் நிறுத்த உடன்பாட்டுக்கு விரோதமாக அரச ஆயுதப் படைகள் தொடர்ந்தும் பொதுக் கட்டடங்களையும், தனியார் சொத்துக் களையும், விவசாய நிலங்களையும் ஆக்கிரமித்து நிற்பதாகச் சுட்டிக்காட்டினேன். இராணுவத்தின் இந்தக் கடும் போக்குக் காரணமாக, இடம் பெயர்ந்த மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத பேரவல நிலை தொடர்வதால், நெருக்கடியைத் தணிக்கும் இந்த உப - குழுவையை இயக்குவதில் எவ்வித அர்த்தமும் இராதெனப் புலிகளின் தலைமை கருவதாகக் கூறினேன். எனக்குப் பதில் அளித்த பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ சிறிலங்காவின் ஆயுதப் படைகள் மாற்று இடங்களுக்கு மாறிச் செல்வதற்கு கால அவகாசம் பிடிக்கும் என ஒரு நொண்டிச் சாட்டை முன் வைத்தார்.

கண்ணிவெடிகளை அகற்றும் பிரச்சினை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 'ஒட்டாவா



உடன்பாட்டில்' (கண்ணிவெடி அகற்றும் சர்வதேச ஒப்பந்தம்) சிறிலங்கா அரசு கைச்சாத்திட விரும்புவதாக தெரிவித்த பேராசிரியர் பீரிஸ், விடுதலைப் புலிகள் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட இணங்காது போனால் ஒரு தலைப்பட்சமாக தமது அரசும் கைச்சாத்திட முடியாது என்றார். எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் பாதுகாப்பு பற்றிய காரணங்களுக்காக தற்போதைக்கு இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத் திட பிரபாகரன் விரும்பவில்லை என் பதை விளக்கினேன். நெருக்கடி நிலை மையை தணித்து இயல்பு நிலையைத் தோற்றுவிக்க சிறிலங்கா இராணுவம் உருப்படியான நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே இந்த விடயம் பற்றி பரிசீலிக்க முடியும் என பிரபாகரன் சமீபத்தில் விடர் ஹெல்கிசனிடம் கூறியதையும் நான் சுட்டிக் காட்டினேன். கண்ணிவெடி அகற்றுவதற்கென விடுதலைப்புலிகள் இயக்கம் ஒருகட்டமைப்பை உருவாக்கி, இடம் பெயர்ந் தோரை மீளக்குடியேற்றும் குறிக்கோளுடன் வன்னிப் பெரு நிலப் பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதாகவும் நான் தெரிவித்தேன்.

உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் நிறுவப்பட்ட உப - குழுவான 'சிரான்' செயற்படுவதில் கால தாமதம் ஏற்பட்டு வருவதாக தமிழ்ச்செல்வன் கூறினார். வடக்கு கிழக்கில் மனிதாபிமான பணிகளைத் துரிதகதியில் நடைமுறைப்படுத்தும் அவசியத்தை மகேஸ்வரன் வலியுறுத்தினார். இந்தக் குறிக்கோளுடன் வடக்கு கிழக்கு புனர்நிர்மாண நிதியத்தை வெகு விரைவில் நிறுவுவதென இரு தரப்பினர் மத்தியிலும் இணக்கம் காணப்பட்டது.

சமாதான முயற்சியில் பெண்களின் பங்கு பற்றி விவாதிக்கப்பட்டது. சமாதானப் பேச்சுகளில் பெண்ணியப் பிரச்சினைகளை உள்ளடக்குவது பற்றி ஆராய்வதற்காகப் பெண்களுக்கான உப - குழு ஒன்றை அமைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களது வாழ்வுநிலையை மேம்பாடு செய்வது பற்றியும் விவாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் ஐ.நா. சிறுவர் நிதியத்துடன் (யூனிசெவ்) பங்குதாரராக இணைந்து செயற்திட்டம் ஒன்றையும் உருவாக்குவதென முடிவாகியது.

### சமஷ்டி வடிவங்களை ஆய்வு செய்வது

உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு சமஷ்டித் தீர்வைஆராய்வதென இந்தக் கட்டப் பேச்சுகளின் போது இரு தரப்



பினர் மத்தியிலும் இணக்கம் காணப்பட்டது. இந்த முடிவை ஒரு பெரிய திருப்பமாகவும், கொள்கை மாற்றமாகவும் சில ஊடகங்கள் சித்திரிக்க முயன்றன. விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியக சுயநிர்ணய உரிமையையும் பிரிவினையையும் கைவிட்டுவிட்டதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் தவறாக எடைபோடப்பட்டது. 'ஒஸ்லோ பிரகடனம்' என முக்கியத்துவம் பெற்ற இந்தச் சர்ச்சைக்குரிய விடயம் குறித்து எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை இங்கு தெளிவுபடுத்துவது அவசியமாகிறது.

முதலாவதாக நாம் தெளிவு படுத்த விரும்புவது என்னவென்றால், 'ஒஸ்லோ பிரகடனம்' என்ற தலைப்பில் ஒரு குறிப்பிட்ட பிரகடனம் எதுவும் இல்லை என்பதுதான். சமஷ்டி அரசமைப்பு வடிவங்களை ஆராய்ந்து பார்ப்பது என்ற முடிவு ஒஸ்லோ பேச்சுகளின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பதிவேட்டு அறிக்கையில் இரு தரப்புப் பேச்சுக்குழுத் தலைவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர். நோர்வே வெளிவிகார அமைச்சு வெளியிட்ட பத்திரிகை அறிக்கையிலும் இந்தத்தீர்மானம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் தின உரையில் அறிவித்த கொள்கைப் பிரகடனத்துக்கு இசைவாகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. உள்ளக, வெளியக அம்சங்களைக் கொண்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் கட்டமைப்பு வரம்புக்கு உட்பட்டதாகவே பிரபாகரன் தனது சொற்பதங்களையும் கருத்துருவங்களையும் கையாளுவதும் உண்டு. ஒரு தனித்துவமான மக்கள் சமுதாயம் என்ற ரீதியில் தமிழ் மக்கள் உள்ளக, வெளியக அம்சங்களைக் கொண்ட சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள். உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய பிரதேச சுயாட்சிக்கு உரித்தானவர்கள் என்று தெளிவு படக் கூறியிருக்கிறார் பிரபாகரன். "உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில், எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால் நாம் அத் திட்டத்தை சாதகமாக பரிசீலனை செய்வோம்." என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் பிரபாகரன். "ஆனால் அதேவேளை, எமது மக்களுக்கு உரித்தான உள்ளக சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை." என்றும் அவர் உறுதிபடச் சொன்னார். இதில் இருந்து ஒரு விடயம் தெட்டத் தெளிவாகிறது. அதாவது, பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் வெளியக சுயநிர்ணய உரிமையை பிரபாகரன் தனது கடைசியான, இறுதித் தீர்வாகக் கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படை. இதிலிருந்து நாம் ஒன்றை தெளிவுறப் புரிந்து கொள்ளவேண்டும். அது என்னவென்றால், புலிகளின் தலைவர் பிரபாகரன், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் உள்ளகம், வெளியகம் என்ற இரு அம்சங்களையும் சர்வதேச சட்டங்களுக்கு இசைவாக நுட்பமாகக் கையாளுகிறார் என்பதுதான். பிரபாகரனின் இந்த நிலைப்பாட்டைப் பத்திரிகையாளர் மாநாடுகளிலும் சொற்பொழிவுகளிலும் தெளிவாக விளக்கியிருக்கிறேன். சுயநிர்ணய உரிமை பற்றிய எமது நிலைப்பாடு எவ்விதம் ஐ.நா. பிரகடனங்களுக்கும், சர்வதேச சட்டத்துக்கும் இசைவான முறையில் அமைந்துள்ளது என்பதை ஆழமாக ஆலசுவதற்கு முன்பாக, சமஷ்டி அரசமைப்பின் அடிப்படையில் ஒரு தீர்வை ஆராய்ந்து பார்ப்பதற்கு நாம் எதற்காக இணங்கினோம் என்ற பின்னணியையும் இங்கு சுருக்கமாகப் பார்ப்போம். (தொடரும்...)





# தேசத்தின் குரல் நினைவு சுமந்த பெருவிளையாட்டுகள் பிரான்ஸில்



பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ் தமிழர் விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் மாவீரர் பணிமனை, தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் நினைவு சுமந்த உதைபந்தாட்டப் போட்டி மற்றும் துடுப்பெடுத் தாட்டப் போட்டிகளை நடத்தியுள்ளன.

பாரிஸின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான செவ்ரோன் பகுதியில் மிகவும் சிறப்பாகப் போட்டிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை பிரான்ஸ் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திருமதி நித்தி முகுந்தினி ஏற்றிவைக்க, ஈகைச் சுடரை 1996 அன்று யாழ்ப்பாணத்தில் வீரச்சாவ டைந்த கப்டன் பல்லவியின் சகோதரன் ஏற்றி மலர்வணக்கம் செய்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து போட்டி களில் பங்குபற்றும் வீரர்கள் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பொறுப்பாளர், பிரான்ஸ் தமிழர் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர்,பிரான்ஸ் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் மற்றும் செயற்பாட்டாளர்கள் சகிதம் கைலாகுகொடுத்து அறிமுகப்படுத்தப் பட்டமையை அடுத்து போட்டிகள் ஆரம் பித்து வைக்கப்பட்டன.

நிறைவாக வெற்றிபெற்ற வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் பதக்கங்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன.போட்டிகளில் உதைபந்தாட்டத்தில் 16 அணிகளும் துடுப் பெடுத்தாட்டத்தில் 19 அணிகளும் பங்குபற்றிச் சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுவிஸில் எழுச்சி நிகழ்வு!





சுவிஸில், மாவிலாற்றிலிருந்து முள்ளிவாய்க்கால்வரை வீரகாவியம் படைத்த அனைத்து மாவீரர்களுக்கு மான எழுச்சிநிகழ்வும், மாவீரர்களான நடுகல் நாயகர்களுக்கும், தியாக தீபம் அன்னை பூபதியின் 29 ஆவது ஆண்டு நினைவும், நாட்டுப்பற்றா ளர், மாமனிதர் நினைவுகூரலும் கடந்த 21 ஆம் திகதி அனுஷ்டிக்கப் பட்டன.

சுவிஸ் லூட்சேர்ன் மாநிலத்தில் அரங்கம் நிறைந்த மக்களுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.


சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்வெழுச்சி நிகழ்வில் பொதுச் சுடரேற்றலுடன் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து ஈகைச் சுடர்கள் ஏற்றப்பட்டு அகவணக்கத்துடன் மலர்வணக்கம் செலுத்தப்பட்டது. மக்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்ட வேளையில் இசைக் கலைஞர்களால் எழுச்சிப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான மாநில வாழ் மக்களால் அரங்கம் நிறைந்து காணப்பட்டது இந்த எழுச்சி நிகழ்வில் மாவீர வித்துக்களின் நினைவுகள் சுமந்து எழுச்சி நிகழ்வுகளாக எழுச்சிப் பாடல்கள், இளையோர்களின் எழுச்சி நடனங்கள், சிறுவர்களின் கவிதாஞ்சலி நிகழ்வுடன் காலத்திற்கேற்ப கருப்பொருளை கொண்ட சிறப்புரைகளும் இடம்பெற்றன. இந்த நிகழ் வில் இளம் இசைக்கலைஞர்கள் நாதஸ்வரம் மற்றும் வயலின் வாத்தியக் கருவிகளில் எழுச்சிப் பாடல்களை மீட்டியமை மிகவும் சிறப்பாக அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ‘முள்ளிவாய்க்கால் முற்றம்’

## சிறுவர்களின் இதழ் வெளியீடு






புலம்பெயர்ந்து பிறந்து வளர்ந்தாலும் எமது தாய் மண்ணையும், இன அடை யாளத்தையும் எம் சிறார் களுக்கு ஊட்டி வளர்க்கும் முகமாக கடந்த 6 வருடங் களாக தமிழ்ப் பெண்கள் அமைப்பு ஜேர்மனி, பேர்ளின் கிளையினரால் ‘முள்ளிவாய்க்கால் முற் றம்’ எனும் சிறுவர்களின் ஆக்கம் கையெழுத்துப் பிரதியாக வெளியிடப்பட் டுள்ளது.

முள்ளிவாய்க்கால் பெரும் வலியை எடுத்து ரைக்கும் கவிதைகள், தமி ழனை தலை நிமிர வைக் கும் எமது தேசியத் தலை வரின் படங்களை, தமிழீழ வரை படத்தை, விடு தலையின் அவசியத்தை உணர்த்தும் சித்திரங் களைக் கொண்டதாக இந்த வருட ‘முள்ளிவாய்க்கால் முற்றம்’ இதழ் 6 பேர்ளின் நகரத்தில் வெளியிடப் பட்டது.

முள்ளிவாய்க்காலில் கொடூரமாகக் கொல்லப் பட்ட அனைத்து உறவு களையும், அந்த மண்ணுக் காக தமது உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை யும் வணங்கி மலர் வணக் கம் செலுத்தப்பட்டது. (ஐ)

# கருணாநிதியின் பிறந்த நாளை முன்னிட்டு காங். தலைவர் சோனியா காந்தி விருந்து!



தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த தினத்தை கொண்டாடும் வகையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி புதுடில்லியில் விருந்து பசார நிகழ்வு ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள மேற்படி விருந்துபசார நிகழ்வுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் பலருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் கனிமொழியும் கலந்துக் கொள்வார் எனக் கூறப்படுகின்றது.

சென்னைக்கு விஜயம் மேற்கொண்டு கலைஞர் கருணாநிதியின் பிறந்தநாள் விழாவில் பங்கேற்க முடியாத நிலையில் சோனியாகாந்தி இருக்கின்றமையால், இந்த விருந்து நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி கருணாநிதியின் 94 ஆவது பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ளது. அத்தோடு அவர் தமிழக சட்டமன்றத்துக்குள் சட்டமன்ற உறுப்பினராகக் காலடியெடுத்து வைத்து, 60 ஆண்டுகள் நிறைவானமையை முன்னிட்டு வைரவிழாவும் கொண்டாட தி.மு.கவினர் முடிவுசெய்துள்ளனர். (ச)

# அ.தி.மு.கவின் இரு அணிகளுக்கும் இடையே கட்டப்பஞ்சாயத்து செய்கிறார் பிரதமர் மோடி!



தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, மே 26

அ.தி.மு.கவின் இரு அணிகளுக்கும் இடையே கட்டப் பஞ்சாயத்து செய்யும்வேலையை மேற்கொள்பவர் போல பிரதமர் நரேந்திர மோடி நடந்து கொள்கிறார் .

-இவ்வாறு தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சோழிங்க நல்லூர் தொகுதியில் தி.மு.க. சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் குளங்கள் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்ட பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் காரணங்களுக்காகவே முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வமும் பிரதமரைச் சந்தித்து வருகின்றனர். அந்த சந்திப்புகளில் அ.தி.மு.கவை இரண்டாக உடைப்பதற்கும், உடைந்த அ.தி.மு.கவை ஒன்றாக இணைப்பதற்கும் ஒரு கட்டப் பஞ்சாயத்து நடத்தும் பணிகளைப் பிரதமர் மோடி சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்.

தமிழகம் கடுமையான குடிதண்ணீர் பஞ்சத்தில் சிக்கியுள்ளது. இந்நிலையில் நீர் நிலைகளைத் தூர்வாரி நீரைத் தேக்கும் பணிகளைத் தி.மு.கவினர் துரிதமாகச் செய்து வருகின்றனர். தி.மு.கவினர் மேற்கொள்ளும் இந்தப் பணிகளைப் பார்த்து மாற்று கட்சியினரும், ஆளும் கட்சியினரும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

மக்களுக்கு இதனால் பல நன்மைகள் ஏற்படும் என்பதை மறந்து, தி.மு.கவுக்குப் பெருமை கிடைத்து விடும் என்ற காழ்ப்புணர்வில் இவர்கள் செயற்படுகிறார்கள். தி.மு.கவின் இந்தப் பணிகளைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. விமர்சிக்க வேண்டாம். கொச்சைப் படுத்த வேண்டாம். தமிழக மக்களுக்கு நன்மை செய்யும் நோக்கத்தில் மட்டுமே நாங்கள் செயற்படுகிறோம். -என்றார். (ச)

# தமிழிசையும் குஷ்புவும் 'ட்விட்டரில்' குடுமிப்பிடி


@khushsundar
தங்களைசேர்க்ககாங்கிரசிலிருந்து தூதர்கள் வரவில்லைஆனால் தங்களைதிமுகவிலிருந்து துரத்துபவர்கள் இருந்தார்களே

சென்னை,மே 26

சமூக வலைதளமான ட்விட்டரில் தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் மற்றும் காங்கிரஸ் செய்தி தொடர்பாளரும், நடிகையுமான குஷ்பு ஆகியோருக்கிடையே கடுமையான வார்த்தைப் போர் நடந்துள்ளது. இவர்களின் காரசாரக் கருத்துப் பதிவுக்கு பதில் கருத்து பதிவிடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

ரஜனி அரசியலுக்கு வருவது பற்றிய தமிழிசை கூறிய கருத்தை வைத்து, சண்டையைத் தொடக்கினார் குஷ்பு.

தமிழிசை - குஷ்புஇடையே நடந்த மோதல் :

குஷ்பு : மக்கள் அரசியலில் சேர்வது அவர்களின் கொள்கைள் மற்றும் விருப்பத்துக்காக மட்டுமே. நீங்கள் தான் உங்கள் கட்சியில் சேரும்படி கெஞ்சிக் கொண்டு இருக்கிறீர்கள்.

தமிழிசை : குஷ்பு அரசியலில் இணைந்தீர்களா? கட்சிகளுக்கு தாவினீர்களா? தி.மு.கவில் இருந்து விலகி காங்கிரஸில் இணைந்தமை மிகச் சிறந்த கொள்கையா என அனைவருக்கும் தெரியும்.

குஷ்பு : தி.மு.கவிலிருந்து விலகுவதற்கு 6 மாதத்துக்கு முன்பிருந்து இரு கட்சிகளுடனும் எனக்கு நல்லுறவு இருந்தது. உங்கள் மூளையைச் சரி செய்து கொண்டு பேசுங்கள்.

தமிழிசை: தங்களைச் சேர்க்க காங்கிரஸிலிருந்து தூதர்கள் வரவில்லை. ஆனால் தங்களை தி.மு.கவிலிருந்து துரத்துபவர்கள் இருந்தார்களே.

குஷ்பு : மறுபடியும் தவறான கருத்தை பதிவிடுகிறீர்கள். எனது முதல் கட்சிக்கும், இரண்டாவது கட்சிக்கும் நான் ஏன் தி.மு.கவில் இருந்து விலகினேன் எனத் தெரியும். வதந்திகளையும், ஊடகங்களின் கருத்துக்களையும் உங்களைப் போன்றவர்கள் நம்புகின்றமை வருத்தமளிக்கிறது. மற்றவர்களின் மனதை படிக்கும் திறன் உங்களுக்கு இருந்தால் தயவு செய்து என்னுடைய கொள்கையையும் புரிந்து கொள்ளுங்கள். நம்புங்கள். உங்களை நீங்களே அதிகம் காயப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

தமிழிசை : மிக்க நன்றி. மருத்துவர் என்ற முறையில் மற்றவர்களின் மூளையில் என்ன உள்ளது என்பதை ஸ்கேன் பண்ணித் தெரிந்து கொள்வதில் நான் ஸ்பெஷலிஸ்ட். கட்சிக்கு நல்லவர்களைக் கொண்டுவர முயற்சிப்பதற்கு கெஞ்சுவது என்று அர்த்தம் ஆகாது. வார்த்தைகள் தான் எண்ணங்களைக் காட்டும்.

குஷ்பு : எனக்கு ஒன்றை தெளிவுபடுத்துங்கள், நீங்கள் மனோதத்துவ நிபுணரா அல்லது பொது மருத்துவரா? மருத்துவர் அவர்களின் நோயாளிகளைச் சந்திப்பதால், அவர்களைத் தான் படிக்க முடியும். உங்கள் கருத்துக்கு தான் நான் பதில் கருத்துக் கூறினேன். நான் கூறியதை மீண்டும் நன்றாக படித்துப் பாருங்கள்.-

இவ்வாறு அவர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். (ச)

# ஐரோப்பிய நாடுகளுக்கு மோடி சுற்றுப்பயணம்!

பிரதமர் மோடி எதிர்வரும் 29 ஆம் திகதி ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர் ஜேர்மன், ஸ்பெயின் மற்றும் ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார் எனகூறப்படுகின்றது.

முதலாவதாக ஜேர்மன் செல்லும் பிரதமர் மோடி, அந்நாட்டு அதிபர் அங்கேலா மேர்கல்லை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். இந்தப் பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என கூறப்படுகிறது. மேலும், வர்த்தகப் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்றிலும் மோடி கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி ஸ்பெயின் நாட்டுக்குச் செல்லவுள்ள அவர், அங்கு மன்னர் 6 ஆம் பிலிப்பையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவுக்கு ஜூன் மாதம் முதலாம் திகதி விஜயம் செய்து, செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் நகரில் நடைபெறும் இந்திய-ரஷ்யா வருடாந்த மாநாட்டிலும் கலந்துகொள்ள உள்ளார்.

மேலும், அன்றைய தினமே பிரான்ஸ் சென்று அங்கு இரண்டு நாள்கள் தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளார். அதன் பின்னர் ஜூன் 3 ஆம் திகதி அவர் நாடு திரும்பவுள்ளார் என் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச)

# பாபர் மசூதி இடிப்பு வழக்கு: அத்வானிக்கு அழைப்பாணை!

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் உமாபாரதி ஆகியோரை நேரில் ஆஜராகுமாறு டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு குற்றப்புலனாய்வு சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது விசாரணைக்கு நேரில் ஆஜராக விலக்குக் கோரிய அத்வானி உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது. மேலும், எதிர்வரும் 30 ஆம் திகதி இவர்களை நேரில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதுதொடர்பாக அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், பா. ஜ.கவின் மூத்த தலைவர் அத்வானி உட்பட 13 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திரைப்படப் பாடலாசிரியர் காமராசன் காலமானார்!



தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் நா.காமராசன் (வயது -74) உடல் நலக் குறைவால் சென்னையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலமானார்.

1942 ஆம் ஆண்டு தேனி மாவட்டம் மீனாட்சி புரத்தில் இவர் பிறந்தார்.

திரைப்படத் துறையில் எம்.ஜி.ஆர். மூலம் பாடலாசிரியராக நா.காமராசன் அறிமுகமானார். 'பல்லாண்டு வாழ்க', 'நீதிக்குத் தலைவணங்கு', 'இதயக்கனி', 'இன்று போல் என்றும் வாழ்க', 'நவரத்தினம்', 'ஊருக்கு உழைப்பவன்', 'வெள்ளை ரோஜா', 'நல்லவனுக்கு நல்லவன்', 'இதயகோவில்', 'உதயகீதம்', 'நான் பாடும் பாடல்', 'தங்கமகன்', 'அன்புள்ள ரஜினிகாந்த்', 'கைகொடுக்கும் கை', 'காக்கிச்சட்டை', 'காதல் பரிசு', 'முந்தானை முடிச்சு' உட்பட 33 திரைப்படங்களுக்கு பாடல் எழுதியுள்ளார். பஞ்சவர்ணம் திரைப்படத்துக்கு அவர் வசனம் எழுதியுள்ளார்.

கலைமாமணி விருது, சிறந்த பாடலாசிரியர் விருது, பாரதிதாசன் விருது ஆகியவற்றை இவர் பெற்றுள்ளார்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கதர் வாரியத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றத்தின் உறுப்பினராக இவரை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நியமித்தார்.

'கறுப்பு மலர்கள்', 'கிறுக்கன்', 'நாவல்பழம்', 'மகாகாவியம்', 'சுதந்திர தினத்தில் ஒரு கைதியின் டைரி', 'தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும்', 'சூரியகாந்தி', 'சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்', 'ஆப்பிள் கனவு', 'அந்த வேப்பமரம்' ஆகிய நூல்களை எழுதியுள்ளார். (ச)

# ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிர் தப்பினார் மகாராஷ்டிரா முதல்வர்!



தொழில் நுட்பக் கோளாறு காரணமாக மகாராஷ்டிரா முதல்வர் சென்ற ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் முதல்வர் தேவேந்திர பட்நவிஸ் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "லட்டூர் பகுதியில் நான் சென்ற ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது. பயப்படத் தேவையில்லை. இந்த விபத்தில் விமானிக்கு சிறிய காயம் தான் ஏற்பட்டது. மற்ற வர்கள் நலமுடன் இருக்கின்றனர். 11 கோடி மகாராஷ்டிரா மக்களின் ஆசிர்வாதமே இதற்குக் காரணம்" - எனத் தெரிவித்துள்ளார். (ச)

# மன்செஸ்டர் தாக்குதல் குற்றவாளியின் தந்தை, சகோதரர் லிபியாவில் கைது!

திரிபோலி, மே 26

22 பேரை பலிகொண்ட இங்கிலாந்தின் மன்செஸ்டர் நகரில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு காரணமான முக்கிய குற்றவாளியின் தந்தை மற்றும் சகோதரர் லிபியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தின் மன்செஸ்டர் நகரத்தில் அமெரிக்காவின் பிரபல பொப் பாடகி ஏரியனா கிராண்ட்டின் இசை நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சுமார் 10.30 மணியளவில் நிகழ்ச்சி நடைபெற்ற அரங்கில் பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன. இதனால், அங்கு குழுமியிருந்த 22 பேர் உயிரிழந்தனர். சுமார் 58 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.





மன்செஸ்டர் தாக்குதலுக்கு தாங்கள் தான் காரணம் என டெலிகிராம் செயலி வழியாக ஐ.எஸ். அமைப்பினர் அறிவித்தனர். இத்தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய தற்கொலைப் படைத் தீவிரவாதியை பொலிஸார் நேற்றுமுன்தினம் அறிவித்தனர்.

லிபியாவில் இருந்து சிறு வயதில் அகதியாக இங்கிலாந்து வந்த 22 வயதான சல்மான் அபேதி என்பவர் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார் எனவும் இவர் மன்செஸ்டர் நகரின் பல்வேறு முகவரிகளில் வசித்து வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே தகவல்களை அமெரிக்க பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் உறுதிசெய்தனர்.

இந்நிலையில், லிபியாவில் இருக்கும் அபேதியின் தந்தை மற்றும் சகோதரர் ஹஸீம் அபேதி ஆகியோரை அந்நாட்டுப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். இந்தத் தாக்குதலில் இவர்களுக்குத் தொடர்பு இருக்கலாம் எனக் கருதி கைது செய்துள்ளோம் என்றும் விசாரணைக்குப் பின்னர் ஏனைய தகவல்கள் தெரிவிக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக இதுவரை 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

## மத்திய தரைக்கடலில் அகதிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் பலி!



ரோம், மே 26

லிபியாவில் இருந்து இத்தாலிக்கு அகதிகளாகச் சென்ற படகு நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வளைகுடா நாடுகளில் இருந்து உள்நாட்டு போர் மற்றும் தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக பலர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் பாதுகாப்பில்லாத படகுப் பயணங்களை மட்டுமே தேர்வு செய்கின்றனர். சிறிய படகுகளில் அளவுக்கு அதிகமானோர் பயணம் மேற்கொள்வதால் கடலில் படகு கவிழ்ந்து விபத்து ஏற்படுவது தொடர் கதையாகிவிட்டது.

இந்த நிலையில், லிபியாவில் இருந்து சுமார் 500 முதல் 700 பேர் அகதிகளாக மத்திய தரைக்கடலில் மரப்படகு மூலம் ஐரோப்பிய நாடான இத்தாலியை நோக்கி பயணம் மேற்கொண்டுள்ளனர்.

லிபியா கடல் எல்லையிலிருந்து 20 கடல் மைல் தொலைவில் நேற்று படகு நடுக்கடலில் திடீரென கவிழ்ந்துள்ளது. இதில், படகிலிருந்த 200 பேர் கடலில் விழுந்து தத்தளித்துள்ளனர்.

விபத்துக் குறித்து தகவலறிந்து சென்ற மீட்புக்குழுவினர் கடலில் விழுந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில், 3 குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். மீட்கும் பணியில் இத்தாலிய கடற்படை தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசியாவிலேயே முதன் முறையாக ஓரினத் திருமணத்திற்கு அனுமதி!

தைபே, மே 26

ஆசிய நாடுகளிலேயே முதன் முறையாக தைவானில் ஓரினத் திருமணத்திற்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளது.



தைவான் நாட்டில் ஓரினத் திருமணத்திற்கு அரசு தடைச் சட்டம் விதித்தது. ஒரு பாலினத்தவர் திருமணம் செய்ய அனுமதிக்கு மாறு பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடந்தன, அதை எதிர்த்தும் பல போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், தற்போது அமுல் படுத்தப்பட்டுள்ள ஒரே பாலினத்தவர் திருமணத் தடைச் சட்டங்கள் பொதுமக்களின் உரிமைகளை நேரடியாக மறுப்பதற்குச் சமம் என்றும் இது போன்ற திருமணங்கள் செல்லத்தக்கது அல்ல என்ற வாதம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்றும் தெரிவித்துள்ளது.

ஓரினத் திருமணத்திற்கு அனுமதி அளிக்கும் வண்ணம் தேவையான சட்டங்களை இயற்றவும் அந்நாட்டு அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவின் மூலம் ஒரே பாலினத்தவர்கள் திருமணம் செய்ய அனுமதிக்கும் முதல் ஆசிய நாடாக தைவான் இடம்பெற்றுள்ளது.

## எவரெஸ்ட் சிகரத்தில் 4 சடலங்கள் மீட்பு

காத்மண்டு, மே 26

கடந்த மாதம் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி காணாமற்போன 4 பேரின் சடலங்களை அங்கு மீட்புப் பணியில் ஈடுபட்ட ஷெர்பா பழங்குடியினர் மீட்டுள்ளனர்.

உலகின் மிக உயரமான சிகரம் எவரெஸ்ட்டில் (8 ஆயிரத்து 848 மீற்றர்) ஏறி சாதனை படைப்பதற்காக பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் நேபாளத்துக்குச் செல்கின்றனர்.

கடந்த மாத இறுதியில் 7 ஆயிரத்து 950 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள நான்காம் முகாம் பகுதியில் சிகரம் ஏறுவதில் ஈடுபட்டிருந்த 2 நேபாள நாட்டவர் உள்பட 4 பேர் திடீரென மாயமாகினர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஷெர்பா பழங் குடியினர் அந்த முகாம் பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு கூடாரம் அமைத்து தங்கியிருந்த 4 பேரும் சடலமாக மீட்கப்பட்டனர். அவர்கள் 4 பேரும் மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்திருக்கின்றமை தெரியவந்தது. இதையடுத்து கடந்த ஒரு மாதத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியபோது பலியானவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது.

## இந்தோனேஷியா குண்டு வெடிப்பில் மூன்று பொலிஸார் பலி!

ஜகார்த்தா, மே 26

இந்தோனேஷியாதலைநகர் ஜகார்த்தாவில் உள்ள பேருந்து நிலைய வளாகத்தில் இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்பில் மூன்று பொலிஸார் பலியாகியுள்ளனர்.



இந்தோனேஷியா தலைநகர் ஜகார்தாவில் உள்ள பேருந்து நிலையத்தின் வாகன நிறுத்தப்பகுதியில் நேற்றுமுன்தினம் பயங்கர சத்தத்துடன் இரு குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன.

இந்த குண்டு வெடிப்பில் பேருந்து நிலையத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த மூன்று பொலிஸார் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும், ஐந்து பொலிஸார் உள்ளிட்ட 10 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பு தற்கொலைப்படை தாக்குதலாக இருக்கலாம் என பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட இருவரை அடையாளம் காணும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக தீவிரவாத தடுப்புப் பிரிவினர் அருகிலுள்ள பாண்டென், மேற்கு ஜாவா மாகாணங்களில் இரு வீடுகளில் அதிரடிச் சோதனைகளை நடத்தியுள்ளனர்.

உலகில் முஸ்லிம் மதத்தினர் அதிகமாக வசிக்கும் நாடுகளில் ஒன்றான இந்தோனேஷியாவின் பாலி நகரில் கடந்த 2002 ஆம் ஆண்டில் அல்- கொய்தா இயக்கத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட தீவிரவாதத்தாக்குதலில் 202 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கழுத்துக்கு நேராக கத்தி!

## கோஹ்லி கூறுகின்றார்



மும்பை, மே 26

இந்தியத் துணைக் கண்டத்து கிரிக்கெட் வீரர்களுக்கு ஒவ்வொரு தொடரும் வாழ்வா? சாவா? போல உள்ளது. அந்நிய மண்ணில் சிறப்பாகச் செயற்படத் தவறினால், கழுத்துக்கு நேராகக் கத்தியை நீட்டுவது போன்ற ஆபத்தான சூழலை சந்திக்க நேரிடும் என்று விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சார்பில் 'மினி உலக கிண்ணம்' என்று அழைக்கப்படும் 8 ஆவது சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் (50 ஓவர்கள்) எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் இடம் பெறவுள்ளது.

இதில் 'நடப்பு சம்பியன்' இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட உலகின் சிறந்த 8 அணிகள் பங்கேற்கின்றன. இதில் பங்கேற்கும் விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி வீரர்கள் நேற்று முன்தினம் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

அதற்கு முன்னர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே கோஹ்லி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அசத்திய இந்திய அணி கிண்ணத்தை வென்றது.

இம்முறையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்தத் தொடரில் நடப்பு சம்பியனாக பங்கேற்பது நெருக்கடியாக இருக்கும் என நினைக்கவில்லை. போட்டிகள், குறுகிய கால இடைவெளியில் நடப்பது மற்றும் உலகின் சிறந்த 8 அணிகள் மோதுவது என மற்ற தொடர்களைவிட சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் கடினமானது.

இந்தியத் துணைக் கண்டத்து கிரிக்கெட் வீரர்களுக்கு ஒவ்வொரு தொடரும் வாழ்வா? சாவா? போல உள்ளது. மற்ற அணிகளைச் சேர்ந்த வீரர்கள் இந்திய மண்ணில் சரியாக விளையாடாமல் நாடு திரும்பினால், அங்கு பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

அதேநேரம், அந்நிய மண்ணில் இந்திய வீரர்கள் சொதப்பினால் அவ்வளவுதான், கழுத்துக்கு நேராக கத்தியை நீட்டுவது போன்ற ஆபத்தான சூழலை உணர்கின்றனர். கடுமையாக விமர்சிக்கின்றனர்.

இது போன்ற செயல்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

என்னைப் பொறுத்த வரையில் இழந்த 'போர்மை' மீட்க வேண்டும் என நினைத்து ஒருபோதும் விளையாடுவதில்லை. இந்தியாவுக்காகப் போட்டிகளில் வெற்றி பெற்றுத் தரவேண்டும் என்பது தான் ஒரே நோக்கம்.

எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி இந்திய அணி, பாகிஸ்தானைச் சந்திக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் மற்றப் போட்டிகளைப் போல இதுவும் ஒன்று. அவ்வளவுதான்.

இது குறித்து பரபரப்பான செய்திகள் வெளியாகின்றன. அதெல்லாம் எங்களது கட்டுப்பாட்டுக்குள் கிடையாது. கிரிக்கெட் வீரர் என்ற முறையில் மைதானத்துக்கு வெளியில் நடக்கும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டி: மோர்கன் சதத்தால் இங்கிலாந்து வெற்றி பெற்றது!



லீட்ஸ், மே 26

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இயன் மோர்கன் சதத்தால் இங்கிலாந்து அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது.

முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் லீட்ஸ் நகரில் இடம்பெற்றது.

முதலில் துடுபெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 339 ஓட்டங்களைக் குவித் தது. அணித்தலைவர் இயன்மோர்கன் 93 பந்துகளில் 107 ஓட்டங்களை எடுத்தார்.


ஹால்ஸ் 61 ஓட்டங்களும், மொயின் அலி 77 ஓட்டங்களும் எடுத்தனர். 340 ஓட்டங்கள் என்ற இலக்குடன் விளையாடிய தென்னாபிரிக்க அணியில் தொடக்க வீரர் டி- கொக் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்த அம்லா - பொப் டு பிளிஸ்சிஸ் ஜோடி சிறப்பாக விளையாடியது. அவர்கள் இருவரும் ஆட்டமிழந்த பின்னர் விக்கெட்டுகள் சரிந்தன. அம்லா 73 ஓட்டங்களும், டு பிளிஸ்சிஸ் 67 ஓட்டங்களும், அணித் தலைவர் டிவில்லியர்ஸ் 45 ஓட்டங்களும் எடுத்தனர்.

தென்னாபிரிக்கா 45 ஓவர்கள் நிறைவில் 267 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால், இங்கிலாந்து 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 2 ஆவது ஒருநாள் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸில் சிமோனா ஆடுவது சந்தேகம்!



பாரீஸ், மே 26

உலக தரவரிசையில் 4 ஆவது இடம் வகிக்கும் ருமேனியா டென்னிஸ் வீராங்கனை சிமோனா ஹாலெப் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பிரெஞ்சு ஓபனில் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

சிமோனா ஹாலெப் கடந்த வாரம் இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டியின் போது கணுக்காலில் காயமடைந்தார்.

காயத்துக்கு அவர் தொடர்ந்து சிகிச்சை எடுத்து வருகிறார். இதனால், நாளை மறுதினம் தொடங்கும் பிரெஞ்சு ஓபனில் அவர் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

இது குறித்து 25 வயதான சிமோனா ஹாலெப் தெரிவித்தவை வருமாறு:-

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பரிசோதனையில் கணுக்கால் தசைநாரில் காயம் ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

பிரெஞ்சு ஓபனுக்கு தயாராகுவதற்கு என்னால் முடிந்த எல்லா முயற்சிகளையும் செய்கிறேன்.

தற்போதைய நிலையில் இந்தப் போட்டிக்குள் நான் உடல் தகுதியை எட்டுவதற்கு 50 சதவீதம் அளவே வாய்ப்பு இருக்கிறது என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.

இருப்பினும் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பிரெஞ்சு ஓபனில் கலந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பந்துவீச்சில் மாற்றம்: அஷ்வினின் அதிரடி!




மும்பை, மே 26

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சாதிக்க பந்துவீச்சில் சில புதிய யுத்திகளைக் கையாளத் தயாராக உள்ளேன் என்று அஷ்வின் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதில் 'நடப்பு சம்பியன்' இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன.

இதற்கு முன் ஒவ்வொரு அணியும் பயிற்சி போட்டியில் விளையாடுகின்றன. இதில் இந்திய அணி, நியூஸிலாந்து ( எதிர்வரும் 28 ஆம் திகதி), பங்களாதேஷ் (எதிர்வரும் 30 ஆம் திகதி) அணிகளுடன் மோதவுள்ளது.

இந்தத் தொடருக்கான இந்திய அணியில், தமிழக சுழற்பந்துவீச்சாளர் அஷ்வின் இடம் பெற்றுள்ளார். சொந்த மண்ணில் தொடர்ச்சியாக 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய இவருக்கு, சமீபத்தில் முடிந்த 10 ஆவது ஐ.பி.எல். தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டது.

இதுகுறித்து அஷ்வின் தெரிவித்தவை வருமாறு:-

சமீபத்தில் கிடைத்த ஓய்வால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு சிறப்பான முறையில் தயாராக முடிந்தது. இந்தத் தொடரில் எனது பந்துவீச்சில் சில மாற்றங்கள் கொண்டுவரவுள்ளேன். இதனை, அடுத்து நடக்கவுள்ள இரண்டு பயிற்சி போட்டியில் சோதித்து பார்க்கத் திட்டமிட்டுள்ளேன். எனது புதிய யுத்திகள் அணியின் வெற்றிக்கு நிச்சயம் கைகொடுக்கும் என நம்புகிறேன்.

ஐ.சி.சி. ஒருநாள் போட்டிக்கான விதிமுறைகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, பந்துவீச்சில் வித்தியாசம் காட்ட முடிவு செய்தேன். இதன்மூலம் அதிக அளவில் ஓட்டங்கள் வழங்குவதை தவிர்க்கலாம்.

ஐ.பி.எல். தொடரில் இந்திய வீரர்கள் மட்டு மின்றி, வெளிநாட்டு வீரர் களும் தங்களது பலத்தை வெளிப்படுத்தி வருகின் றனர்.

இந்தத் தொடர் மூலம் திறமையான நிறைய இளம் இந்திய வீரர்கள் கண்டறியப்படுகின்றமை வரவேற்கத்தக்கது. இது, அடுத்து வரும் தொடர்களிலும் நீடிக்கும் என நம்புகிறேன்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சியட் நிறுவனம் சார்பில், சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரருக்கான விருது அஷ்வினுக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை முன்னாள் இந்திய அணித்தலைவர் கவாஸ்கர் வழங்கி கௌரவித்தார்.

அஷ்வின், கடந்த 12 மாதங்களாக பங்கேற்ற டெஸ்ட் போட்டிகளில் 99 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இந்திய அணி, சொந்த மண்ணில் விளையாடிய 13 டெஸ்ட் போட்டிகளில் 10 போட்டிகளில் வெற்றி பெற காரணமாக இருந்தார். இதனால் இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இதேவேளை, இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதிய ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடிய இந்தியாவின் சுப்மன் கில் (19 வயது), சிறந்த இளம் கிரிக்கெட் வீரருக்கான விருதைக் கைப்பற்றினார்.

# உயிரிழந்த உறவுகளுக்காகவே விளையாடி வெற்றிபெற்றோம்!

· மன்சென்ஸ்டர் யுனைட்டட் தெரிவிப்பு





மன்செஸ்டர், மே 26

யுரோப்பா கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று மன்சென்ஸ்டர் யுனைட்டட் அணி இந்த வருடத்திற்கான சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

இறுதிப்போட்டியில் எஜக்ஸ் அணியை எதிர்கொண்ட மன்செஸ்டர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பித்த 18 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் அணியின் பௌல் பொக்பா முதலாவது கோலை அணிக்கு பெற்றுக் கொடுக்க, 48 ஆவது நிமிடத்தில் ஹென்ரிக் மெக்கிட்டரியான் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

எஜக்ஸ் அணி கடும் முயற்சிகளை மேற்கொண்டும், எவ்வித கோல்களையும் பெறமுடியாமல் தோல்வியடைந்தது.

இந்த வெற்றி தொடர்பில் மன்செஸ்டர் அணியின் பௌல் பொக்பா கருத்து தெரிவிக்கையில்-

மன்செஸ்டர் தாக்குதலில் உயிரிழந்த எமது உறவுகளுக்காகவே நாம் விளையாடினோம். அவர்களுக்கு இந்த வெற்றியை காணிக்கையாக்குகிறோம்.

இந்த சீசன் எங்களுக்கு மிகவும் மோசமானதாக அமையும் என சிலர் தெரிவித்தனர். எனினும் நாம் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றிருக்கிறோம்.

இதற்கு நாம் பெருமையடைகிறோம். நாம் இந்த வெற்றிக்காக மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தோம். அதற்காக நாம் இப்பொழுது சந்தோஷப்படுகிறோம்.- என தெரிவித்துள்ளார்.

# பந்து கழுத்தில் தாக்கியதால் நிலைகுலைந்தார் மெக்ஸ்வெல்

மெல்போர்ன், மே 26

ஆஸ்திரேலிய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கிலேன் மெக்ஸ்வெல் துடுப்பாட்ட பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, அவரது கழுத்தில் பந்து தாக்கியுள்ளது.

இதில் சற்று நிலை தடுமாறிய மெக்ஸ்வெல் தரையில் விழுந்துள்ளார்.

மைதானத்தில் இருந்த வீரர்கள் மற்றும் பயிற்சியா ளர்கள் மெக்ஸ்வெலை ஓடிவந்து கவனிக்க, அதிஷ்டவசமாக அவருக்கு எவ்வித பாரிய உபாதைகளும் ஏற்படவில்லை.



எனினும், பந்து தாக்கியதற்குப் பின்னர் மெக்ஸ்வெல் அவரது அறைக்குச் சென்றுவிட்டார்.

இதனால், அவர் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடுவதில் சிக்கல் ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில், அவருக்கு பெரிதான காயங்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது என்றும் ஆஸி. அணித்தலைவர் ஸ்டீபன் ஸ்மித் ஊடகவியலாளர்களை சந்தித்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அதே தினத்தில் வலைப்பயிற்சியின் போது ஆஸி. வீரர் மெத்தியுவ் வேடிற்கும் அபாயகரமான முறையில் பந்து ஹெல்மட்டில் தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னணி நாடுகளைப் பின்தள்ளி அதிர்ச்சி கொடுத்த பங்களாதேஷ்!

டுபாய், மே 26

சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று வெளியிட்ட ஒருநாள் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் பங்களாதேஷ் அணி 6 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலகக் கிண்ணத்தை வென்றுள்ள மூன்று அணிகளை பின்தள்ளி 6 ஆவது இடத்துக்கு பங்களாதேஷ் அணி முன்னேறியுள்ளமை இதுவே வரலாற்றின் முதல் தடவையாகும்.

பங்களாதேஷ் அணி 93 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளதுடன், இலங்கை 93 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்தையும், 88 புள்ளிகளுடன் பாகிஸ்தான் 8 ஆவது இடத்தையும் பிடித்துள்ள அதேவேளை, மேற்கிந்தியத் தீவுகள் அணி 79 புள்ளிகளுடன் 9 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

பங்களாதேஷ் அணி முதன் முறையாக 6 ஆவது இடத்துடன் சம்பியன்ஸ் கிண்ணத்தில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒருநாள் தரவரிசை பட்டியலில் தென்னாபிரிக்க அணி முதலிடத்தில் உள்ளதுடன், ஆஸி, இந்திய அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை பிடித்துள்ளன.

## கிணற்றைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், துப்பாக்கி ரவைக் கோதுகளும் மீட்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றபோது அவர்கள் முறைப்பாட்டை ஏற்காத நிலையில்,சம்பவத்தைக்கேள்வியுற்று அங்கு வந்த படையினர் மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளை எடுத்துச் சென்றுவிட்டனர் எனக் கூறப்படுகின்றது.

படைத்தரப்பு இவ்வாறு செயற்பட்டமை தொடர்பாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்தில் படையினரின் வதை முகாம் ஒன்று இருந்தது எனப் பொதுமக்களால் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், படையினர் இலக்கத் தகடுகளை எடுத்துச் சென்றமை பொதுமக்களிடையே சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இருபது வருடங்களுக்கு மேலாக படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்த வலி.வடக்கில் பொது மக்களின் காணிகள் பகுப்படியாக விடுவிக்கப்பட்டுவருகின்றன. அங்கு பொதுமக்கள் மீளக் குடியேறி வருகின்றனர்.

இந்நிலையில்,அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன் துறை ஜே/235 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர். இவ்வாறு மக்கள் மீளக் குடியேறிய கிணறு ஒன்றை வீட்டு உரிமையாளர்கள் நேற்றுத் துப்புரவு செய்தபோதே மோட்டார் சைக்கிள்களும் அவற்றுக்குரிய உதிரிப் பாகங்களும் மீட்கப்பட்டன.

இது தொடர்பாக முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாத பொலிஸாரின் செயல் தொடர்பாகவும் இலக்கத் தகட்டை எடுத்துச்சென்றபடையினரின்செயல் தொடர்பாகவும் மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக உடனடியாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவைத் தலைவர் சிவ ஞானம் தலைமையில் நடை பெற்றது. இதன் போது மேற்படி விடயங்கள் குறித்து சபை உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சமய ஒழுக்கங்களைவளர்க்கும் நோக்கில் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் மாகாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களைநிறுத்துவதற்கு அமைச்சரவைஅனுமதிவழங்கியுள்ளதாகவும் இதற்கமைய சபையின்ஒப்புதலையும் கோரியுள்ளதாகவும் அவைத் தலைவர் தெரிவித்தார்.

சபை உறுப்பினர்களும் அதனை ஏற்றுக் கொண்டமையுடன் அதனைச் செய்ய வேண்டியதன் அவசியங்கள் குறித்தும் சுட்டிக்காட்டினர். தனியார் கல்வி நிலையங்களில் மாலை ஆறு மணிக்கு பின்னர் கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுவதனாலும் காலை ஆறு மணிக்கு முன்னர் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதனாலும் பல முறையற்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து மேற்படி தனியார் கல்வி நிலையங்கள் மாலை ஆறுமணிமுதல் காலை ஆறுமணிவரை இயங்கக்கூடாதெனத் தீர்மானிப்பட்டது.

## பிரிகேடியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்த்தனா நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ருவன்பத்திரன உத்தரவிட்டார்.

2013 ஒகஸ்ட் முதலாம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூடு மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களில் 14 வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட 3 பொதுமக்கள் உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வந்த பொலிஸார் ஒரு சார்ஜண்ட், இரண்டு கோப்ரல்கள் என 3 இராணுவத்தினரைக் கைது செய்திருந்தனர். அவர்கள் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உத்தரவிட்ட கட்டளை அதிகாரியே இப்போது கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நேற்று வந்த போதே அவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இறுதிக் கட்டப் போரில் மேஜர் சவேந்திர சில்வா தலைமையிலான58ஆவதுடிவிஷனின்முதலாவதுபிரிகேட்டுக்கு (581ஆவது பிரிகேட்) அப்போது லெப்டினன்ட் கேணலாக இருந்த அநுர தேசப்பிரிய குணவர்த்தனவே கட்டளை அதிகாரியாகப்பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணமுதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாகாண சபையின் 93 ஆவதுமாதாந்தஅமர்வு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று வியாழக் கிழமை சபாமண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதுசபையின் எதிர்க்கட்சித்தலைவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலையே முதலமைச்சர் மேற் கண்டவாறு பதிலளித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பல தரப்புக்களால் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து அந்த விடயங்கள் விசாரணை செய்யுமாறு மாகாண சபை உறுப்பினர்களால் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய ஓய்வு பெற்ற நீதிபதிகள் உட்பட மூன்று பேரை கொண்ட குழு முதலமைச்சரால் நியமிக்கப்பட்டது.

அந்தக்குழுவின் விசாரணைகள் முடிவடைந்துவிட்டனவா? முடிவடைந்து விட்டால் அதன் அறிக்கை உங்களுக்குக் கிடைத்துள்ளதா? கிடைத்திருந்தால் அதனை வெளியிட முடியுமா? - என்று எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சரிடம் வினா எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், அமைச்சர்கள் மீதான விசாரணைகள் முடிவடைந்து அந்த விசாரணை அறிக்கை கடந்த 19.05.2017 அன்று என்னிடம் கிடைக்கப்பெற்றது. அந்த அறிக்கை குறித்து பரிசீலித்து வருகின்றேன். அடுத்த அமர்வில் அதுபற்றித் தெரிவிக்கப்படுமென்றார். (உ)

## சபைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபையின் நேற்றைஅமர்வின்போது சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா முதலமைச்சரிடம் பல் வேறு வினாக்களைக் கேட்டிருந்தார். அவற்றுக் கெல்லாம் முதலமைச்சர் விக்னேஸ் வரனும் உரிய பதிலை வழங்கியிருந்தார். இதன்போது சபையில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் சபையின் செயற்பாடுகள் குறித்தும் வாதப் பிரதிவாதங்களை முன் வைத்தனர்.

குறிப்பாக சபையின் கடந்த மூன்றரை வருட காலச் செயற்பாடுகள் குறித்து ஊடகங்களின் முன்னால் பகிரங்க விவாதம் ஒன்றுக்குவருமாறு எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சவால் விடுத்தார்.

மாகாண சபை குறித்து வெளியே தவறான பிரசாரங்கள் முன்வைக்கப்படுகின்றன எனவும் அதேநேரம் சபையின் உறுப்பினர்களும் அவ்வாறான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர் எனவும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டினர்.

இதனைத்தொடர்ந்து கடந்த மூன்றரை வருடத்தில் மாகாண சபை என்ன செய்தது, என்ன செய்யவில்லைஎன்பனகுறித்து பட்டியலிட வேண்டுமென்றும் அவை குறித்து விவாதமொன்று நடத்தப்பட வேண்டுமென்றும் சபையின் உறுப்பினர்களால் மீளவும் வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு இவ்வாறான விவாதம் அல்லது மீளாய்வுக் கூட்டம் ஒன்றைநடத்துவதன் ஊடாகவே மாகாணசபை மீதான சில விமர்சனங்களையும் பல வதந்திகளையும் நீக்கமுடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்பின்னர்சபைச்செயற்பாடுகள் குறித்துவிவாதிப்பதற்கு அடுத்த அமர்விற்குப் பின்னர் அதாவது அடுத்த மாத இறுதியில் விசேட அமர்வொன்றை நடத்தப்படுமென்று அவைத் தலைவர் அறிவித்தார். (உ)

## வீரவன்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் உடனடி விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர் சார்பில் கொழும்பு பிரதம நீதிவான்நீதிமன்றத்தில் நேற்றுக் கோரிக்கைவிடுக்கப்பட்டமையை அடுத்து அதற்கான உத்தரவை நீதிவான் விடுத்தார்.

பொய்யான பெயர் மற்றும் பிறந்த திகதிகளைக் குறிப்பிட்டு வெவ்வேறான பிறப்புச் சான்றிதழ்களைப்பெற்று அவைமூலம், இராஜதந்திரக் கடவுச்சீட்டு ஒன்று உட்பட இரண்டு கடவுச் சீட்டுக்களையும், இரண்டு தேசிய அடையாள அட்டைகளையும் சுவீகரித்துப் பயன்படுத்தினார் என்ற குற்றச் சாட்டில் 2015 பெப்ரவரியில் கைதுசெய்யப்பட்டசசிவீரவன்ஸ பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வர இருக்கையிலேயேமேற்படிசான்றுபொருள்களான கடவுச் சீட்டு மற்றும் அடையாள அட்டை என்பன நீதிமன்றப் பாதுகாப்பில் இருந்து காணாமல்போன தகவல் வெளியாகியிருக்கின்றது.

நீதிமன்றப் பதிவுகளின் படி அவை 2015 பெப்ரவரி 15 ஆம் திகதி நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

"இன்று (நேற்று) காலை இந்தக் கடவுச்சீட்டுகளில் சாதாரண கடவுச்சீட்டும் அடையாள அட்டையும் நீதிமன்றப் பெட்டகத்தில் இருந்து காணாமல்போயிருக்கின்றனஎனபதிவாளர் குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்." - என சட்டமா அதிபர் தரப்பில் நேற்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றைய அமர்வில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 93 ஆவது அமர்வு கைதடியிலுள்ள மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்றது.

இதன் போது சபை அறிவிப்புக்களை விடுக்கின்ற போதே அவைத்தலைவர் மேற்படி கண்டனத்தை வெளியிட்டார். அதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-.

மாகாண சபையின் 92 ஆவது அமர்வு கடந்த 09.05.2017 ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது சபையின் நுழைவாயில்களை மூடி வடக்கு மாகாண வேலையற்ற பட்ட தாரிகள் கவனயீர்ப்புப் போராட்ட மொன்றை மேற் கொண்டிருந்தனர்.

இதனால் சபை அமர்வுகளில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாது போயிருந்தது. அதே போன்றே உத்தியோகத்தர்களும் மாகாண சபைக்கு உள்ளே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதனால்பெரும் அசௌகரியங்களும் ஏற்பட்டிருந்தன. இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது. ஆகவே எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அதாவது சபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளே அல்லது வெளியே சென்று வருதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.- என சிவஞானம் மேலும் தெரிவித்தார்.

## முள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீ.வீ.கே.சிவஞானம்மேற்கண்டவாறு சபையின் வருத்தத்தை தெரிவித் தார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க் காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரும் முகமாக நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாண சபை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது.

அதற்கமைய இந்த வருட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வையும் வடக்கு மாகாண சபை ஏற்பாடு செய்திருந்தது. அதனடிப்படையில் கடந்த 18 ஆம் திகதி நடந்த நினைவேந்தல்நிகழ்வின்போது சில குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன.

அத்தகைய குழப்பங்கள், குறுக்கீடுகளுக்கு வடக்கு மாகாண சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதாக அவைத் தலைவர் சிவஞானம் மேலும் தெரிவித்தார்.

## ஆஸி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மல்கம் டேர்ன்புல்லுக்கும் இடையில் நேற்றுக் காலை இடம் பெற்ற இரு தரப்பு பேச்சுக்களின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் மூன்று உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

கன்பெராவிலுள்ள ஆஸ்திரேலிய மத்திய நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற இந்தப் பேச்சுக்களில் இருதரப்புஉறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (உ)

## கலப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூரிய சக்தி மூலம் 800 மெகா வாட்ஸ் மின்சாரமும் உற்பத்தி செய்யக்கூடிய தாக இந்தப் பூங்கா அமையும்.

மின்வலு,மீள்சக்திஉருவாக்க அமைச்சு இது தொடர்பாக முன்வைத்த திட்டத்தையே அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இந்தத் திட்டம் மூன்று கட்டங்களில்நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது. (உ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரது சடலம் சுமார் ஒரு மணித்தியால தேடுதலின் பின்னர் குளத்தில் இருந்து மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## ட்ரயட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ட்ரயல் - அட்பார்' ஆயம் எதிர்வரும் 12 ஆம் திகதி முதற் தடவையாக யாழ்ப்பாணத்தில் கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அச்சமயம், 9 எதிரிகளுக்கும் எதிரான 41 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பகிர்வுப் பத்திரம் சட்டமா அதிபரினால் உத்தியோகபூர்வமாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (உ)

## ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை செய்வதற்காக அவரைத் தேடுகிறோம்."- என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

"கைதுசெய்யப்பட்டபின்னர் அவர் படுகொலை செய்யப்படலாம் என அஞ்சுகிறோம். அதனால் அவரைத் தலைமறைவாகும்படி கூறியுள்ளோம். அவர் இரகசிய இடத்தில் உள்ளார்." - எனப் பொதுபலசேனா வட்டாரங்கள் தெரிவித்தன.

வெறுப்பூட்டும்பேச்சுகள் மற்றும்நடவடிக்கைகள் தொடர்பில் வண.ஞானசாரருக்கு எதிராக பத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் உள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுபலசேனா அமைப் பின் பிரதிநிதி வண.மகாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்திருக்கின்றார்.

"புதிதாக கொண்டு வரப்படவுள்ள சட்டத்திற்கு அமையவே ஞானசார தேரரை கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறு அவரை கைது செய்ய முன்னர் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கைது செய்ய வேண்டும். அடுத்தடியாக ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தால் அவரை கைது செய்ய முடியும் எனத் தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை கைதுசெய்ய வேண்டும். மேலும் விஜயகலா மகேஸ்வரனைக்கைதுசெய்ய வேண்டும். அடுத்ததாக அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், அதே போல் அசாத் சாலி ஆகியோரையும் கைது செய்ய வேண்டும். அவ்வாறு கைது செய்தால் ஞானசார தேரர் உடனடியாக சரணடைவார். - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# ஞானசார தேரரை அல்ல, அதற்கு முன்னர் சம்பிக்கவையே கைது செய்ய வேண்டும்

## இனவாதத்தை ஒழிக்க நாமல் ராஜபக்ஷவின் யோசனை

இனவாதத்தை ஒழிக்க தற்காலிக செயற்பாடுகள் வேலைக்கு ஆகாது நீண்ட காலத் திட்டம் அவசியம் என குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இதற்காக ஞானசார தேரரைக் கைது செய்ய முன்னர் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவைக் கைது செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவரது இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதியைச் சந்திக்க முஸ்லிம் பிரமுகர்கள் வந்திருந்தபோது அங்கு கருத்து வெளியிட்ட சமயமே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஞானசாரதேரரை கைது செய்துவிட்டால் அனைத்து பிரச்சினைகளும் முற்றுபெற்று விடும் என்ற நினைப்பில் சிலர் உள்ளனர். உண்மையில் அவரைக் கைது செய்யமுன்னர் இஸ்லாமியர்களுக்கு எதிராக புத்தகம் எழுதிய சம்பிக்கவைக் கைதுசெய்ய வேண்டும். ஞானசார தேரர் மாத்திரம் கைது செய்வதனூடாக ஒரு போதும் இனவாதத்தை இல்லாதொழிக்க முடியாது. இன்றுஅவரைப் போன்று பலர் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இவரைக் கைது செய்தால் இவர் விட்ட இடத்தில் இருந்து இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல பலர் வருவார்கள். ஏன் என்றால் அதற்காக வெளிநாடுகள் பணம் வழங்குகின்றன.

எமது ஆட்சிக் காலத்தின் கடைசி இரு வருடங்களில் தான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத அமைப்புக்கள் தலை தூக்கி இருந்தன. இவ்வாறான அமைப்புக்களின் உள்நோக்கங்களைப் புரிந்து செயற்பட எமக்குச் சில காலங்கள் தேவைப்பட்டன. அதற்குள் எமது ஆட்சி கவிழ்க்கப்பட்டுவிட்டது.

தற்போதைய ஆட்சியில் பொது பல சேனாவின் இனவாதச் செயற்பாடுகளில் நான்கு வருட அனுபவம் உள்ளது. இவ்வனுபவம் இவர்களை அடக்கப் போதுமான காலமாகும்.

2004 ஆம் ஆண்டு இனவாத பிரசாரங்களை முதன்மையாகக் கொண்டு சுமண தேரர் தலைமையில் ஜாதிக ஹெல உறுமய ஆரம்பிக்கப்பட்டது. அவர்களும் பொது பல சேனாவின் இன்றைய பாதையையே அன்று தெரிவு செய்திருந்தார்கள். அமைச்சர் சம்பிக்க முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு புத்தகமே வெளியிட்டிருந்தார்.

பொது பலசேனாவை எமது ஆட்சிக் காலத்தில் கட்டுப்படுத்த நாங்கள் தீர்மானம் மேற்கொண்ட போது எங்களை அவற்றைச் செய்ய வேண்டாமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்றோர் தடுத்தமையே இவர்கள் இருவரினதும் பாதைஒன்று என்பதை அறிந்துகொள்ளச் செய்கிறது. எனினும், அக் காலத்தில் அவற்றுக்கு நாம் இடமளிக்கவில்லை. இவ்வாறான பிரச்சினைகளை நிறைவுக்குகொண்டு வரஇனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து செயற்படுவதே ஆரோக்கியமானதாகும். இந்த ஆட்சிக் காலத்தில் இன நல்லுறவை ஏற்படுத்த எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தேசிய சகவாழ்வுக்கென ஒரு அமைச்சை நல்லாட்சி அரசு உருவாக்கியுள்ள போதும் அந்த அமைச்சால் எந்தவிதமான உருப்படியான நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படவில்லை. இதுவரை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் முன்மொழிவுகூட முன்வைக்கப்படவில்லை.

வெறுமனே அமைச்சுக்களைப் பெயரளவில் வைத்திருப்பதால் எதனையும் சாதிக்க முடியாது. இன்று அவர்களே தாங்கள் முன்னர் நியமித்த அமைச்சர் சரிவரச் செய்யமாட்டார் என உணர்ந்து அமைச்சரவையை மாற்றுகின்றமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோகணேசனின் விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலையிட்டமையால் அவர்களுக்கு இடையில் முரண்பாடுகள் தோன்றியிருந்த கதைகள் அமைச்சரவை மட்டம் வரை சென்றிருந்தது.

இவர்கள் தங்களுக்கிடையிலேயே சகவாழ்வை ஏற்படுத்த முடியாதுள்ள போது எவ்வாறு இலங்கை நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்பமுடியும், முதலில் இந்தநாட்டில் உள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் இந்த அரசை மாற்றுவதே தீர்வாகும். என்றார் நாமல்.

புலம்பெயர்ந்து லண்டனில் வசித்துவரும் தெய்வேந்திரா ஜெயானி என்பவர் தனது பிள்ளைகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தர்மபுரம் மத்திய கல்லூரி மாணவிகள் மூவருக்குச் சைக்கிள்களை வழங்கியுள்ளார். பரந்தன் உதவும் உறவுகள் அமைப்பின் ஊடாக இவற்றை அவர் வழங்கி வைத்தார். (ஐ-21)



சாவகச்சேரி வர்த்தக சங்கத்தின் அனுசரணையில் மூன்று வர்த்தகர்கள் இணைந்து சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு 300 பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி முதல்வர் ஜெயக்குமாரன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கதிரைகளை சாவகச்சேரியைச் சேர்ந்த வர்த்தகர்களான வை.சிவராசா, சு.பாக்கியராஜ், வே.சிவதுனன் ஆகியோர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ஐ-21)





## பத்தினி வழிபாடு இன்று

யாழ்ப்பாணம், மே.26

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகாரசபையின் வைகாசிப் பொங்கல் (பத்தினி வழிபாடு) இன்று வெள்ளிக்கிழமைகாலை8மணிக்கு யாழ்ப்பாணம்கோட்டைமீனாட்சி அம்மன்ஆலயத்தில் நடைபெறும். (ச)

## நாளை மின் தடை

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை யாழ்பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக் கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, கொடிகாமம் கச்சாய் வீதி, பனைவள ஆராச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்ஸர் பிளான்ட், நெடுந்தீவு தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை ஆகிய இடங்களிலும்-

வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தைப் பிரதேசம், கந்தசாமிநகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், இலுப்பைகுளம், அழகாபுரி, துட்டுவாகை, செட்டிகுளம் நகரம், சின்னசிப்பிகுளம், முதலியார் குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், அரசடிகுளம், காந்திநகர், அரசன் குளம், வலயம் 06, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கஜசிங்கபுர இராணுவ முகாம், செட்டிகுளம் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும்

மன்னார் பிரதேசத்தில் பள்ளமடுவிலிருந்து வெள்ளாங்குளம், விடத்தற்தீவு கிராமம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி, கணேசபுரம், விடத்தல்தீவு வைத்தியசாலை, தேவன்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

## அலங்கார உற்சவங்கள்

யாழ்ப்பாணம், மே 26

குப்பிளான் வட பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் பத்தாம் நாளான எதிர்வரும் ஜுன்மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அம்பாளுக்கு 108 சங்காபிஷேக உற்சவமும்; மறுநாள் புதன்கிழமை விசாகப் பொங்கலும் இடம்பெறும். (ச)

* * *

யாழ்ப்பாணம் நல்லூர் பண்டாரகுளம் ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணிக்குஇடம்பெறும்.

எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ச)

* * *

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பூரண புஸ்கலை சமேத ஹரிஹர புத்திர (ஐயனார்) வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமைமுதல்நடைபெற்றுவருகிறது.

பன்னிரண்டாவது தினமான நாளை சனிக்கிழமை 7 மணிக்கு சங்காபிஷேகமும், அன்றைய தினம் மாலை 5 மணிக்குத் திருக்கல்யாணம், திருவூஞ்சல் என்பன இடம் பெறும்.

நெடுந்தீவில் 45 லட்சம் ரூபா மாகாண நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட முறைசாராக் கல்வித் தொழில்திறன் பயிற்சி நிலையம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்டடத்துக்கான பெயர்ப் பலகையை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திரைநீக்கம் செய்து வைக்க, நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. என். விந்தன் கனகரத்தினம் நாடா வெட்டி தொழில்திறன் பயிற்சி நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு கல்விக் கோட்ட அதிகாரி திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ், தீவக கல்வி அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர் எஸ். கணேசராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)










# சகாக்களை விடுவிக்க கோரி யாழ்.பட்டதாரிகள் கவனவீர்ப்பு





கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளகிழக்குமாகாண பட்டதாரிகள் சங்கத் தலைவர் உட்பட நால்வரையும் உடனடியாக விடுதலை செய்யக்கோரிவடமாகாண வேலையற்ற பட்டதாரிகளால் நேற்றுப் பிற்பகல் யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவன வீர்ப்பு போராட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டது.

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட காலவரையற்ற கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 88ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் தொடர்பில் திருகோணமலையில் நீதிமன்றக் கட்டளையைக் கிழித்தெறிந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுகைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட பட்டதாரிகள் கருத்துத்தெரிவிக்கையில் –

இந்த நால்வரும் திருகோணமலை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தடையுத்தரவுக் கட்டளையைக் கிழித்தெறிந்னர் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அவ்வாறு செய்தமையைச்சரியென்று கூறி நாங்கள் நியாயப்படுத்த முனையவில்லை. ஆனால், அவர்கள் தமது விரக்தியின் உச்சமாக அந்தத் தவறை மேற்கொண்டிருக்கலாம். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

கடந்த 90 நாள்களுக்கும் மேலாக வடக்கு, கிழக்கில் பட்டதாரிகளான நாம் எமது தொழிலுரிமையை வலியுறுத்திப் போராடி வரும் நிலையில், இரண்டு மாகாண சபைகளும் எமக்கான வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதில் பல தவறுகளை விட்டிருக்கின்றன.

இதன் காரணமாகவே நாம் பல நாள்கள் கடந்த பின்னரும் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மாகாண சபைகள் எமக்கு இழைத்த தவறுகளை விடவா அந்த நான்கு பட்டதாரிகளும் தவறுகள் இழைத்துள்ளனர்? – என கேள்வியெழுப்பியுள்ளனர்.

# வடக்கில் தான்தோன்றித்தனமாக விகாரைகள் அமைக்க முடியாது

## வடக்கு மாகாண அரசு அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் எந்த இடத்திலும் அனுமதி பெறப்படாமல், தான்தோன்றித்தனமாக விகாரைகள் அமைக்க முடியாது என வடக்கு மாகாண அரசு அறிவித்துள்ளது.

வடக்கே நாவற்குழியிலும் முல்லைத்தீவிலும் இவ்வாறு சட்டவிரோதமாக விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன எனவும் வடக்கு மாகாண அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 93 ஆவது அமர்வு நேற்று அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, நாவற் குழியில் அமைக்கப்படுகின்ற விகாரை தொடர்பாக எதிர்க் கட்சித்தலைவர் சி.தவராசா கவன வீர்ப்பு பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார்.

அந்தப் பிரேரணை மீது கருத்துத் தெரிவித்த வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்படி அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில்–

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியேறியிருக்கும் இடத்தில் அந்த மக்களுக்கு ஆசி கூறுவதற்காக இன்று பௌத்த பிக்குகள் 300 பேர் வருகை தரவுள்ளனர் எனவும் அதன்போது கறுப்புக் கொடிப் போராட்டம் இடம்பெறவிருப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால், இன்று (நேற்று) அப்படி எதுவும் நடைபெறவில்லை.

வடக்கில் எவரும் தான்தோன்றித்தமான விகாரைகளை அமைக்க இடமளிக்க முடியாது. – என்றார்.

இதன்போது அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கருத்துக்கூறுகையில்–

நாவற்குழிப் பிரதேசம் தமிழ் மக்களின் பூர்வீக இடம். ஆனால் தற்போது அங்கு நடைபெறுகின்ற விடயங்கள் மிகவும் கவலைக்குரியவையாக இருக்கின்றன. – என்றார்.

இங்கு உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர்களும் விகாரைகள் அமைக்கப்படுவது தொடர்பாக தமது எதிர்ப்புக்களை வெளியிட்டனர். வடக்கில் நாளாந்தம் விகாரைகள் அதிகரிக்கின்றன. திடீர் திடீரென முளைக்கும் விகாரைகளே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் தடுக்கப்பட வேண்டியது அவசியம். – என்றனர். (ம)



எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் இந்தியா, பூட்டான், மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான சுவீடன் தூதுவர் ஹரால்ட் சண்ட்பேர்க்கை சந்தித்தார்.

மாண்புறும் சிவா ஆசான்
மணி விழாக் கண்டாய் வாழி!



பொன்னம்பலம் சிவானந்தராஜா
(Sp.Trd.Science, B.Ed (Hons), Dip.in School Mgt)
S.L.P.S-I
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், வேலணை)

60

மாங்குயில் கீதம் பாட
மயிலினம் நடனம் ஆட
வான்முகில் பன்னீர் சிந்த
வண்டினம் தேனில் நீந்த
தேன் கவி வாணர் வாழ்த்த
தேவியர் தீபம் ஏற்ற
மாண்புறும் சிவா ஆசான்
மணி விழாக் கண்டாய் வாழ்க!
அரும் பெரும் குணத்தோன்; எங்கள்
ஆருயிர் நிலத்தோன்; எந்தப்
பெருமையும் இல்லாப் பெரியோன்
பொறுமையும் தமக்கே உரியோன்
அருமையாய் சிவா என்றே
அனைவரும் அழைக்கும் ஆசான்
சீரிய சேவை செய்தே
சிறப்புற்றான் தாள் வாழ்க!

60

உங்களால் ஏற்றம் காணும்
பழைய மாணவர்கள், காரைநகர் இந்துக் கல்லூரி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.